Registered as a news paper.
இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து + IV
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 03 (07.01.2003) செவ்வாய்க்கிழமை இதழ் : 98

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
பாடசாலை மாணவர்களுக்கான DSI சப்பாத்துக்கள் (SHOES) ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
DSI பாதணிகளின்
யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
SUPER SHOES
சுப்ப சூஸ்
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-414)



றோஸ் கார்டனில் பேச்சுக்கள் தொடங்கும் முன் அரச, புலிகள், நோர்வே பிரதிநிதிகள்.



நான்காம் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகின்றன.

# மக்களின் அவசரத் தேவைகள்; உடன் நிறைவேற்றப்பட வேண்டும்!

## பேச்சுக்களில் முடிவு காணுமாறு தேசியத் தலைவர் பிரபா வலியுறுத்து

(நமது நிருபர்)



மக்களுக்கான அவசர, மனிதாபிமானத் தேவைகளை, புனர்வாழ்வுப் பணிகளை உடன் ஆரம்பிக்கவேண்டுமென்றும் பேச்சுக்களின்போது இவ்விடயம் வலியுறுத்தப்படவேண்டுமென்றும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

தனியே இணக்கப்பாடு மட்டுமல்ல அவற்றை நடைமுறைப்படுத்துவது பற்றியும் உறுதியான முடிவை எட்டுமாறு- பேச்சுக்களில் கலந்துகொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு அவர் பணித்திருக்கிறார்.

## துரித மனிதாபிமான உதவிகள் பேச்சில் புலிகள் முன்வைப்பு!

### பாதுகாப்பு வலய விவகாரம் இன்று தொடர்கிறது

(தாய்லாந்திலிருந்து கனகரவி)

சமாதான முன்னெடுப்புக்கள் தொடங்கி ஒரு வருடம் பூர்த்தியடைந்துவிட்டபோதும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கை நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

எனவே, இந்தப் பேச்சுக்களில் மக்களின் மனிதாபிமான - புனர்வாழ்வுத் தேவைகளை நிறைவு செய்வது குறித்தும், உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் மீள்குடியமர்வு குறித்தும், உறுதியான முடிவுகளை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகத் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எமது செய்தியாளருக்கு நேற்றிரவு அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இராணுவ வெறியாட்டங்களினால் எமது பிரதேசம் முழுமையாகச் சிதைந்த நிலையில் இருக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்தை நிறுத்துமாறு கண்காணிப்புக்குழு கேட்டது!

உயர்பாதுகாப்பு வலயம், மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக தற்பொழுது தாய்லாந்தில் நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, பேச்சுவார்த்தை முடிவுகள் வெளியாகும் வரை, மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களை நிறுத்தி வைக்குமாறு வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்திடம் யாழ்ப்பாண மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி கேட்டுள்ளார்.

நேற்று வலி.வடக்கு பொது அமைப்புக்களின் (10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



உதுதான் சரி, சனத்திட பிரச்சினை தீர்ந்தாத்தானே சமாதானமும் நிலைக்கும்.

## மூன்று மணிநேரம் நீடித்த நேற்றைய பேச்சுவார்த்தை

(நகொன்பத்தமிலிருந்து கனகரவி)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று தாய்லாந்தில் ஆரம்பமாகிய நான்காம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இக்காலப்பகுதியில் ஆறு சுற்றுப்பேச்சுக்களில் அரச மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஈடுபடவுள்ளனர். நேற்றைய பேச்சுக்கள் சுமார் மூன்று மணிநேரம் நீடித்தன.

இதேவேளை - நகொன்பத்தம் நகரில் நேற்று (10ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தி மற்றும் முன்னெடுப்பு குறித்தே பேச்சில் ஆராயப்பட்டது!

### பேச்சு முடிவில் அமைச்சர் பீரிஸ்

(நகொன்பத்தம்)

வட- கிழக்கு சார்ந்த அபிவிருத்திப் பணிகள் குறித்தும் அதனை முன்னெடுப்பது குறித்தும் நேற்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்டது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முதல் நாள் பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

ஜப்பானில், மே அல்லது ஜூனில் நடக்கவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் எவ்வாறு விடயங்களைக் கையாள்வது எனப் பேசப்பட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வந்த ஜப்பான் அமைச்சர் வாஜ்பாயைச் சந்திக்க விரைவு!

இலங்கையின் சமாதான முயற்சி தொடர்பான இந்திய நிலைப்பாட்டை அறிவதற்கு ஜப்பான் வெளியுறவு அமைச்சர் யொரிக்கோ கவாக்குச்சி நாளை இந்தியாவிற்குப் பயணமாகின்றார் என்று ஜப்பான் வெளியுறவு அமைச்சின் செயலாளர் தக்ஹசி தெரிவித்தார்.

ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்த அவர், யாழ்ப்பாணத்திற்கு வந்து தற்போதைய நிலைமைகள் மற்றும் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் போன்றவற்றை பார்வையிட்ட பின்னர், நேற்றுமாலை கொழும்பு

(10ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் போராளி ஒருவர் சாவு!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இலுப்படிச்சேனை என்னுமிடத்தில் உழவியந்திரத்துடன் மோட்டார் வாகனம் மோதிக்கொண்டதில் மோட்டார் வாகனத்தில் வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினரான மணியரசன் என்ற போராளி அவ்விடத்திலேயே சாவைத் தழுவிக் கொண்டார். இச்சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

இவருடன் வந்த போராளி பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பெயர் மாற்றம்

பலாலி வடக்கு அன்ரனிபுரத்தைப் பிறப்பிடமாகவும் பொலிகண்டி கிழக்கு, ஆலடி ஒழுங்கை, பதுவளையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் அந்தோனிப்பிள்ளை ஜோட்ஸ் மங்கமறி ஆகிய நான் 07.01.2003 முதல் எனது பெயரை யோசேப் அந்தோனிப்பிள்ளை சுஜீவன் எனப்பெயர் மாற்றம் செய்து கொள்கிறேன் என்பதனை அனைவருக்கும் உத்தியோகபூர்வமாக அறியத்தருகின்றேன்.

பதுவளை,
ஆலடி ஒழுங்கை,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

அந்தோனிப்பிள்ளை
சுஜீவன்

(090)



## பதவி வெற்றிடம் ~ விடுதிக் காப்பாளர்

- கல்வித்தகைமை : பட்டதாரி
- முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- வயதெல்லை : 35 - 60
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்.
- இல்லப்பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும் வழி காட்டுதலிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுதல் வேண்டும்.
- தொண்டூதியம் பேசி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசித்திகதி : 10.01.2003.

சைவ வித்தியா விருத்திச்சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

சோ.பத்மநாதன்,
செயலாளர்.

(சி-448)



## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வன் பாலரஜனிதரன் கவியரசன்

ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த
பாலரஜனிதரன் நவனீதா தம்பதிகளின்
**செல்வப் புதல்வன் பா.கவியரசன்**

முதலாவது பிறந்தநாளைத் தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, சித்தி, அத்தை, மாமாமார், பூட்டன்மார், பூட்டிமார், உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

வாழ்த்தும்
குடும்பத்தினர்.

(085)


## இன்றைய நாள் இனிய நாள்

### 07-01-2003 - செவ்வாய்க்கிழமை

மேடம் :- தேக மெலிவு, மிருகங்களால் நன்மை, இல்லச் சிறப்பு.

இடபம் :- குடும்ப மனஸ்தாபம், பெரியோரால் நன்மை, தொழில் சிறப்பு.

மிதுனம் :- மனமகிழ்ச்சி, அதிக லாபம், செல்வாக்கு, நன்மதிப்பு.

கர்க்கடகம் :- கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை, நிம்மதி குறைவு, மனக்கவலை.

சிங்கம் :- பூமி லாபம் பொருள் கைவிட்டுப்போதல், தொழில் கஷ்டம்.

கன்னி :- மன மகிழ்ச்சி, வாகன யோகம், பிள்ளைகளால் நன்மை.

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

துலாம் :- சோர்வு, தார சுகக்குறைவு, மனைவியால் கஷ்டம்

விருச்சிகம் :- காரிய சித்தி, இனசனத்தால் மகிழ்ச்சி, பொருள் வரவு.

தனு :- ஆயுதத்தால் பயம், பொருட்செலவு, மனப்பயம்.

மகரம் :- மனைவி பிள்ளைகளால் நன்மை, பிரயாணத்தால் லாபம், காரிய சித்தி.

கும்பம் :- வயிற்றுவலி, இனசன விரோதம்.

மீனம் :- களஸ்திர சுகம், குடும்பச் சிறப்பு, புதுமையான அனுபவம்.

# ஐந்தாவது டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி!



பாராட்டப்படுகிறார் றிச்சட் டோசன்

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஆஷஸ் கிண்ண டெஸ்ட் தொடரின் ஐந்தாவது போட்டியில் இங்கிலாந்து அணி 225 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நேற்று சிட்னியில் நடைபெற்ற ஐந்தாவது போட்டியின் ஐந்தாவது நாள் ஆட்டத்தில், அவுஸ்திரேலிய அணி 226 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் இங்கிலாந்து அணி வெற்றியைப் பெற்றது.

முதல் நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி ஐந்தாவது போட்டியில் இங்கிலாந்திடம் தோல்விகண்டது. 54 ஓவர்களிலேயே அவுஸ்திரேலியா தனது அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.



வெற்றிக்களிப்பில் இங்கிலாந்து

இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய வீரர்களுக்கு இங்கிலாந்தின் பந்துவீச்சாளர் அன்ட்ரூ கட்டிக் பெரும் சவாலாக இருந்தார். இவர் இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகளைச் சாய்த்தார். இரு இன்னிங்ஸ்களிலுமாக 10 விக்கெட்டுகளை இவர் பெற்றது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் எவருமே அரைச் சதத்தைக்கூடப் பெற முடியவில்லை. பந்துவீச்சாளர் பிறட்லீ 46 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். ஐந்தாவது போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்ற போதும், ஏற்கனவே நான்கு போட்டிகளில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி ஆஷஸ் கிண்ணத் தொடரை வெற்றிகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மாகாணக் கல்விப் பணிப்பாளராக மகாலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக சு.மகாலிங்கம் ஜனவரி முதலாம் திகதி பதவியேற்றுள்ளார்.

இவர் கடந்த 12 வருடங்களாக மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் மேலதிகக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவனான இவர், புங்குடுதீவை பிறப்பிடமாகக் கொண்டவர்.

(ச,லி)


**நிறஞ்சனாஸ் சங்கானை**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இன்று முதல்
சூர்யா, லைலா, சினேகா நடித்த
**உன்னை நினைத்து**
10.01.2003 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 மட்டும் **SPIDER MAN**
(சி/397)



**ராஜா** யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா சௌத்திரி,
வடிவேல், மணிவண்ணன் நடித்த
**சுந்தரா டிராவல்ஸ்**
10.30,
2.30,
6.00
(சி-398)


## யாழ்ப்பாணம் - மாநகரசபை

### சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் ஆகியவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

### மீள் கேள்வி அறிவித்தல் – 2003

கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள் என்பவற்றை 01.02.2003 முதல் 31.12.2003வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்படிவங்கள் வழங்கும் திகதி | - 21.01.2003 செவ்வாய்க்கிழமைபி.ப 3.00 மணிவரை. |
| கேள்விகள் ஏற்கும் திகதி | - 22.01.2003 புதன்கிழமை பி.ப 12.30 மணிவரை. |
| கேள்விகள் திறக்கும் திகதி | - 22.01.2003 புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு. |
| கேள்விப்படிவக் கட்டணம் | - ரூ. 300/- ஆகும் (வற் உட்பட). |

விபரம்

| சந்தைகள் | | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற் நீங்கலாக) |
|---|---|---|---|
| 1. புங்கன்குளம் சந்தை | | 2,500/- | 15,000.00 |
| 2. அரியாலை சந்தை | | 2,500/- | 138,600.00 |
| **இறைச்சிக் கடைகள்** | | | |
| 1. நாவாந்துறை மாட்டி.கடை | இல.7 | 2,500/- | 8,900.00 |
| 2. நாவாந்துறை மாட்டி.கடை | இல.8 | 1,500/- | 5,100.00 |
| 3. நாவாந்துறை மாட்டி.கடை | இல.9 | 1,500/- | 5,100.00 |
| 4. அரியாலை மாட்டி.கடை | இல.1 | 2,500/- | 40,100.00 |
| 5. அரியாலை ஆட்டிறை.கடை | இல.2 | 2,500/- | 18,900.00 |
| **கருவாட்டுக்கடைகள்** | | | |
| 1. பண்ணை கருவாட்டுக்கடை | இல.2 | 2,500/- | 10,200.00 |
| 2. பண்ணை கருவாட்டுக்கடை | இல.3 | 2,500/- | 10,200.00 |
| 3. பண்ணை கோழிக்கடை | இல.7 | 2,500/- | 20,000.00 |
| 4. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.11 | 1,500/- | 3,250.00 |
| 5. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 1,500/- | 3,250.00 |

குறிப்பு:- பாசையூர் சந்தையை 11.01.2003 முதல் 31.12.2003 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக எதிர்வரும் 10.01.2003ந் திகதி மு.ப 10.30 மணிக்கு ஏலத்தில் விடப்படவுள்ளது.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புவோர் ரூபா 2500/-ஐ பிணைப்பணமாக சபையில் செலுத்தி பங்குபற்றுதல்வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2003.01.06.

(சி-449)

# வெளிவிவகார அமைச்சின் ஊடாகவே ஜனாதிபதி உலக நாடுகளுடன் பேசலாம்!

## வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்காலத்தில் மேற்கொண்டும், நோர்வேப் பிரதமருடன் ஏதாவது கடிதத்தொடர்புகளை வைப்பதாயின், வெளிவிவகார அமைச்சினூடாகவே அதனைச் செய்ய வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு வானொலிக் கருவிகள் கொள்வனவு செய்த விடயத்தில் நோர்வேயின் பங்களிப்புத் தொடர்பாக, அந்நாட்டின் பிரதமருக்கு - சந்திரிகா குமாரதுங்க அனுப்பிய கடிதம் பற்றி கருத்துத் தெரிவிக்கும்போதே - ரிரோன் பெர்ணான்டோ இவ்வாறு அறிவித்துள்ளார். இதுபற்றி அவர் மேலும் கூறும்போது,

ஜனாதிபதி என்ற வகையில் புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டிய ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அமைதி முயற்சிகளைக் குழப்புவதாகவே அமைந்து வருகின்றது.



நோர்வே, சமாதான முயற்சிகளில் பெரும் பங்களிப்பைச் செய்துவரும் நிலையில் ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடுகள் அமைதி முயற்சினைப் பாதிப்பதாகவே இருக்கின்றது எனவும் ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்ச்ரின் இக்கருத்தை ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் நிராகரித்ததுடன், ஜனாதிபதிக்கு வெளிநாடுகளுடன் தொடர்புகொள்ளப் பூரண அதிகாரம் இருப்பதாகவும், இதற்கு வெளிவிவகார அமைச்சிடம் அனுமதி பெறத்தேவையில்லை எனவும் கூறியுள்ளார்.

### நாவற்குழி ஆலயத்தில் பிள்ளையார் சிலை திருட்டு

நாவற்குழி ஐயனார் ஆலயத்திலிருந்த பிள்ளையார் சிலை அதன் அமைவிடத்திலிருந்து அடியுடன் பெயர்த்து எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தில் தினமும் பூசை ஆராதனைகள் நடைபெற்று வருகின்றபோது, இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருப்பது ஒரு திட்டமிட்ட செயலாக இருக்குமென அவ்வூர் மக்கள் கருதுகின்றனர். இது தொடர்பாக ஆலயப் பரிபாலனசபையினர் சாவகச்சேரி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர். (108)

### மாணவருக்கு அழைப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2003/2004 கல்வியாண்டில் சத்திர சிகிச்சைமானி, சித்தமருத்துவமானி ஆகிய கற்கை நெறிகளைத் தொடர விண்ணப்பித்தவர்கள், நாளை காலை 8 மணிக்கு பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ச.கி)

## மூதூரில் மீன்பிடிப்படகுடன் மோதிய

# கடற்படைப் படகின் ஓட்டுநரை நீதிமன்றில் நிறுத்தப் பணிப்பு

(மூதூர்)

மூதூர் கடற்பிரதேசத்தில் கடந்த 31 ஆம் திகதி கடற்படைப் படகு மோதி மீனவர் ஒருவர் பலியாகிய சம்பவம் தொடர்பாக, அக் கடற்படைப் படகையும் அதன் ஓட்டுநரையும் நீதிமன்றத்தில் முன் நிறுத்தும்படி பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். மீனவரின் மரணம் தொடர்பாக நடைபெற்ற மரணவிசாரணையின்போதே இவ்வுத்தரவு வழங்கப்பட்டது. கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த படகு மீது கடற்படைப்படகு மோதியதாலேயே இந்த மீனவர் இறக்க நேரிட்டது குறிப்பிடத்தக்கது.



கொழும்பு வந்த ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யொரிக்கோ கவாகுச்சியை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ வரவேற்கிறார்.

# பளை வைத்தியசாலை புனரமைக்க 20 மில்லியன் தேவை என மதிப்பீடு!

## மாவட்ட வைத்தியசாலையாக்க இன்னும் 30 மில்லியன் தேவை

யுத்த அனர்த்தங்களின்போது முற்றாகச் சேதமடைந்துள்ள - பளை சுற்றயல்கூறு வைத்தியசாலையை மீளவும் முன்னைய தரத்தில் இயக்குவதற்கு 20 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சேதமுற்ற வைத்தியசாலைக் கட்டிடங்களைத் திருத்தியமைத்து - அதை மீளவும் பழைய தரத்தில் இயங்க வைப்பதற்கே 20 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, இவ்வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கு மேலும் 30 மில்லியன் ரூபாய் தேவைப்படுமெனவும் அதிகாரிகள் மதிப்பீடு செய்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இவ் வைத்தியசாலையில் வைத்திய வசதிகளைப் பெற்று வந்தனர். இவ்வைத்தியசாலையால் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட வைத்தியசேவைகளே வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால், இப்பகுதி மக்களால் வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பலத்த நெருக்கடிகள் எதிர்நோக்கப்பட்டு வருகின்றது.

இதனிடையே, பளை வைத்தியசாலையைப் புனரமைப்புச் செய்வது தொடர்பாக, ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள் குழுவொன்று நேரில் பார்வையிட்டிருந்தது.

ஆனால்- இது தொடர்பாக, ஜபபானிய அரசசார்பற்ற நிறுவனத்திடம் இருந்து இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை எனப் பளைப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (115)

# ரோக்கியோ பேச்சுத் தொடர்பாக ஜப்பானிய அமைச்சர் ஆராய்வார்!

ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் யொரிக்கோ கவாகுச்சி நேற்று முன்தினம் மாலை இலங்கை அரசாங்கத்தின் விசேட அழைப்பின் பேரில் கொழும்பு வந்து சேர்ந்தார்.

இரண்டு நாட்கள் இலங்கையில் தங்யிருக்கும் கவாகுச்சி, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

இந்த வருடம் நடுப்பகுதியில் இடம்பெறவிருக்கும் ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கான பூர்வாங்க ஒழுங்குமுறை குறித்து உயர் அரசாங்க அதிகாரிகளுடன் இவர் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இந்த வருடம் மார்ச் மாதம் ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ரோக்கியோவில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கிடையில் நடைபெற இருக்கும் 6 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை குறித்தும் ஜப்பானிய அமைச்சர் இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# அரசாங்கத்துக்கு அறிவிக்காமல் திட்டவரைபு அனுப்பப்பட்டதாம்!

## பாதுகாப்பு உயரதிகாரிகளின் தன்னிச்சை முடிவு

பிரதமர் ரணில், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் மிலிந்த மொறகொட போன்றோர் வெளிநாடுகளில் இருந்தபோது அவர்களுக்குத் தெரியாமலேயே, மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவின், உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான திட்டவரைபு- ஒஸ்ரின் பெர்ணான்டோவினால் புலிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - சரத் பொன்சேகா தயாரித்த திட்டவரைபு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்கு அனுப்பப்பட்டதையடுத்து, அவர் அதை யுத்தநிறுத்தக் கண்காணிபபுக் குழுவின் தலைவர் புறூவ் ஹொவ்டேயிடம் கையளித்தார்.

அந்தத் திட்டவரைபில் உள்ள உள்ளடக்கங்கள் குறித்து புறூவ் ஹொவ்டே, ஒஸ்ரின் பெர்ணான்டோவுடன கலந்துரையாடினார். அதில், பல சிக்கலான விடயங்கள், மொழிநடைகள் இருப்பது குறித்து ஹொவ்டே, ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்குத் தெரிவித்தார்.

இந்தவேளை, பிரதமர் ரணில் சிங்கப்பூரில் இருந்தார். பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இந்தியாவில் தங்கியிருந்தார். மிலிந்த மொறகொட ஜப்பானில் இருந்தார்.

இதனால் திட்டவரைபின் உள்ளடக்கம் இவர்களுக்குத் தெரியாமலேயே புலிகளிடம் கையளிக்கப்பட்டது. புலிகளிடம் இத்திட்டவரைபு கையளிக்கப்பட்ட பின்னரே, இதிலுள்ள பிரச்சினைகள் அரசமட்டத்துக்குத் தெரியவந்தது.

இதேவேளை, அமைதிப்பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் போது, இத்தகையதொரு திட்டவரைபைத் தயாரிக்க இராணுவத்துக்கு யார் அதிகாரம் கொடுத்தது எனவும் -

குறுகிய நோக்கமுடைய தனிப்பட்ட அதிகாரி ஒருவரின் நடத்தை, பேச்சுக்கான அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதற்கு யார் பொறுப்பு எனவும் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களிலும் கேள்விகள் எழுந்தன.

இதேவேளை, நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தவிடயம் தொடர்பாக படை உயரதிகாரிகளை அழைத்து, ஊடகங்களுக்கு இந்தத் தகவல்களை வழங்கியது யார் என்று வினவியுள்ளார்.

அத்துடன் ஒஸ்ரின் பெர்ணான்டோவையும் இது தொடர்பாக பிரதமர் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் இடமாற்றம் தொடர்பாக ஊடகங்களுக்கு வழங்கிய செய்திகள் குறித்தும், இதை வழங்குவதற்கு யார் அதிகாரம் கொடுத்தது எனவும் பரதமர் அவரிடம் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, சரத் பொன்சேகா தயாரித்த திட்டவரைபை மீள்பரிசீலனை செய்யாததுதான் பிரச்சினைகளுக்குக் காரணம் என மிலிந்த மொறகொட பிரதமருக்கு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையிலேயே, தாய்லாந்துப் பேச்சுக்களில் அரசின் திட்டம் முன்வைக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம் செய்யத் தீர்மானம்

## மாரப்பனவிடமிருந்து போக்குவரத்துத்துறை மீளப்பெறப்படுகிறது

(கொழும்பு நிருபர்)

அமைச்சரவையில் விரைவில் மாற்றங்கள் நிகழவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்வது தொடர்பாக பிரதமர், ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதாகவும் இதன்படியே இம்மாற்றங்கள், செய்யப்படவுள்ளதாகவும்- அரசாங்க வட்டாரங்களில் தெரியவருகிறது.

இதேவேளை- பாதுகாப்பு அமைச்சரான திலக் மாரப்பனவிடம் உள்ள நெடுஞ்சாலைகள், போக்குவரத்து அமைச்சு அவரிடமிருந்து மீளப் பெறப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

முன்னதாக- புதிய அமைச்சர்களை நியமனம் செய்வது தொடர்பாக அரசாங்கத்துக்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

### வடபகுதியிலுள்ள நெடுஞ்சாலைகள் பற்றி கலந்துரையாடல்

வடபகுதியின் தேசிய நெடுஞ்சாலைகளின் அவசரப் புனரமைப்புச் சம்பந்தமான கலந்துரையாடல் கொழும்பில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்களும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளும், இக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர்.

# சூழல் பாதுகாப்பைப் பேண தலைவர் பிரபாகரன் உத்தரவு!

## எட்டு லட்சம் மரங்களை நாட்டத் திட்டம்

(கிளிநொச்சி)

எட்டு இலட்சம் மரங்களை தாயகப் பிரதேசத்தில் நடுகை செய்யுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமக்கு உத்தரவிட்டிருப்பதாக வனவளப் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதாக 'கல்வ் நியூஸ்' (Gulf News) சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.



இது தொடர்பாக இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

விடுதலைப்புலிகள் தமது நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில், நிதி, கல்வி, சுகாதாரம், நீதி, போக்குவரத்து, சுற்றுச்சூழல் ஆகிய துறைகளை விஸ்தரித்து வருகின்றனர். இதற்காக அவர்கள் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்த புலிகளின் வனவளப்பாதுகாப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் - தாம் நிர்வாக முறைகளை சீர்படுத்தி நடைமுறைப்படுத்தி வருவதாகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக புதிய மரங்களை நடுகை செய்து வருவதாகவும் கூறியுள்ளார்.

தலைவர் வே.பிரபாகரனின் உத்தரவுக்கமைய எட்டு இலட்சம் மரங்களை நடுகை செய்யும் திட்டத்தை அமுல் செய்து வருவதாகவும் தேக்கு போன்ற மரங்களே அதிகமாக நடப்படுகின்றது எனவும், அந்த அதிகாரி மேலும் கூறியதாக 'கல்வ் நியூஸ்' சஞ்சிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ். ஊடகவியலாளருக்கு வீடமைப்புக்கு காணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு வீடமைப்புத் திட்டத்தை அமைப்பதற்கு வட்டுக்கோட்டைப் பகுதியில் அரச காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது இக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் அது நிறைவேறாத பட்சத்திலேயே, அமைச்சர் தி.மகேஸ்வரன் இக் காணியை ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

### அச்சுவேலியில் போக்குவரத்திற்கு தடையாக இருக்கும் கற்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு முன்பாகவும், பஸ் நிலையப் பகுதியிலும் சேதமுற்ற வீதிகளைத் திருத்தம் செய்வதற்காக - நீண்டகாலமாகப் பறிக்கப்பட்டிருக்கும் கற்கள் மக்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக மாறியுள்ளன.

எனவே, இவ்வீதிகளைத் திருத்தியமைத்து - மக்கள் போக்குவரத்து சீராக நடைபெற ஆவன செய்யும்படி- சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் மக்கள் கேட்டுள்ளனர்.

(80)

### சத்தியசாயி சேவா நிலையத்தில் திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 10, 11, 12 ஆகிய திகதிகளில் தினமும் காலை 8.30 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக சாயி நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

(ச,கி)

## பருவகாலச் சீட்டு நிறுத்தத்தால் பயணிகள் பாடு பெரும் சிரமம்!

(மானிப்பாய்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் நிலவும் பஸ் வண்டிகளின் பற்றாக்குறை மற்றும் ஆளணிப் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக, சீரான பஸ் சேவையை நடத்த முடியாமல் இருப்பதைக் காரணம் காட்டி - கடந்த முதலாம் திகதியிலிருந்து பாடசாலை மாணவர்கள் தவிர்த்து ஏனைய பயணிகளுக்கான பருவகாலச்சீட்டுக்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டமையினால், இதன் மூலமாகப் பயனடைந்தோர் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

முன்னர் - பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அரச, தனியார்துறையில் பணிபுரிவோர் நாளாந்தம் குறைந்த கட்டணத்தில் பருவகாலச் சீட்டின் மூலமாக பயணித்து வந்தனர்.

இந்த நிலையில், பருவகாலச் சீட்டு இடைநிறுத்தப்பட்டமையினால் பயணிகள் நாளாந்தம் அதிகளவு பணத்தினைச் செலவு செய்யவேண்டியிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. ஆயினும், தனியார் போக்குவரத்து வண்டிகளில் மேலும் அதிகளவு கட்டணம் அறவிடப்படுகின்றதெனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதனால் - விரைவில் பருவகாலச்சீட்டு மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை விரைவில் எடுக்க வேண்டுமென பயணிகள் எதிர்பார்க்கிறார்கள். (100)

### துணைவேந்தரிடம் முன்வைக்கப்பட்ட 25 கோரிக்கைகள்

## இன்று மாலைக்குள் முடிவு தருக; பல்கலை ஊழியர்கள் காலக்கெடு!

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடத்தின் இறுதித்தினத்தன்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் 25 கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக -

இதுவரை நடைபெற்ற கலந்துரையாடல்களின் பெறுபேறுகளின் அடிப்படையிலான துணைவேந்தரின் முடிவுகளை - இன்று மாலைக்குள் கடிதமூலம் அறியத்தருமாறு ஊழியர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக - ஆராய்வதற்காக, பல்கலைக்கழகப் பேரவையினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழுவுடன் - இடம்பெற்ற முதற்சுற்றுக் கலந்துரையாடலுக்குப்பின்னர், ஒரு வாரகாலத்திற்கு வேலை நிறுத்தப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

கோரிக்கைகளை பரிசீலனை செய்வதிலோ, அல்லது நிறைவேற்றுவதிலோ தாமதங்கள் ஏற்படுத்தப்படுவதை சங்கம் இனியும் சகித்துக் கொள்ள முடியாது எனவும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் - துணைவேந்தரின் கடிதத்தினை ஆராய்ந்த பின்னரே அடுத்த நடவடிக்கை பற்றிய தீர்மானத்தை சங்கச் செயற்குழு மேற்கொள்ளும் எனவும் -

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### ஆன்மீக நூல்கள் அன்பளிப்பு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலையின் "மருதடியான் நூலகத்திற்கு" ஆன்மீக நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதனால் - இந்நூலகம் மக்களுக்கு மேலும் பயனுடையதாகுமென அறநெறிப் பாடசாலையினர் தெரிவித்தனர்.


### பேருந்துகளில் சமாதான ஸ்ரிக்கர்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்துகளில் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான வாசகங்கள் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு வருகின்றன.

"சமாதானமே எமது நாட்டம்" என்ற வாசகம் மும்மொழிகளிலும் பொறிக்கப்பட்டு ஒட்டப்பட்டுள்ளது. (கி)

# ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
1966.08.27

தாயக மடியில்
1998.01.07

## மேஜர் ஆனந்தன் / மகிழ்நன்

**(தம்பு - ஆனந்தராசா)**

*மிருசுவில் வடக்கு - மிருசுவில்*

யாழ். புத்தூர் வீதியில் இராணுவத்தினருடன் நேரடி மோதலில் வீரச்சாவு - 1998-01-07

ஒன்பது பேரில் ஒருவராய்ப் பிறந்தாய்
பாசத்துடன் நீ வளர்ந்து வந்தாய்
பந்தபாசம் துறந்து நீயும்
தாயக மண்மீட்க தமிழ்ப்படை சேர்ந்தாய்
பக்கத்து ஊரில் பயமின்றித் தனியே
மாற்றான் படைக்கு மரண அடி கொடுத்து
மாவீரன் ஆனாய் தமிழ்த் தாயக மண்ணில்

நின்தாயகக் கனவுகள் நனவாகும் இவ்வேளையில் ஆறாத்துயருடன்
உன் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்

- குடும்பத்தினர்.

*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.*

(063)



# சிவத்தமிழ்ச் செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 78 ஆவது பிறந்த நாள் சிறப்பு மலர்

## சிவத்தமிழ்ச் செல்வியுடனான சிறப்புப் பேட்டி

✦ **கேள்வி: இன்றைய உலகில் மதங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி ஏது கூறுகின்றீர்கள்?**

✦ **பதில்:** வணக்கம், தாங்கள் கேட்கின்ற கேள்வி இன்றைய உலகிலே நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டிய விடைகளைக் கொண்டதாக அமைந்திருக்கின்றது. இன்றைய உலகிலே மதங்கள் பல்வேறு வகையாகப் பின்னிப்பிணைந்துள்ளன. அதிலே எங்களுடைய சைவ சமயம், பௌத்த சமயம், இஸ்லாமிய சமயம், கிறிஸ்தவ சமயம் என்பது நாங்கள் அறிந்த மதங்களாகும். என்னுடைய கருத்துப்படி மதங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் தனித்து கோவில் பணிக்ள் மாததிரமல்ல. கோவிலை மையமாக வைத்து சமூகங்களை முன்னேற்ற வேண்டிய கடமை மதங்களுக்குண்டு. இந்த வகையில் கிறிஸ்தவ மதம் ஓரளவுக்குச் செய்கின்றது. அதேமாதிரி இஸ்லாமிய மதமும் செய்கின்றது. ஆனால், எங்களுடைய சைவசமயம் இதிலே சிறிது பின் தங்கி நிற்கின்றது என்பதைத்தான் நான் மனவருததத்துடன் கூறவேண்டி இருக்கிறது.

எங்களுடைய சமயம் கோவிலைக் கட்டுகிறது, விழாக்கள் எடுக்கின்றது. ஆனால கோவிலை மையமாக வைத்து சமூகத்தினரை முன்னேற்றுகின்ற பணிகளிலே ஈடுபடுபவதாகத் தெரியவில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்பதைத்தான் எங்களுடைய கோவிலை மையமாக வைத்து நாங்கள் வளர்த்து வருகின்றோம்.

இந்தவகையில் கோவிலை மையமாக வைத்து மகளிர் இல்லம் போன்ற நிறுவனங்களை ஏற்படுத்தி சமூகப் பணிகளிலே ஈடுபட்டு வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றேன்.


✦ **கேள்வி:- குறிப்பாக சைவ நெறியைப் பெரும்பான்மையாகப் பின்பற்றும் எமது சமூகத்தில், சமயத்தின் பங்கு மற்றும் பணிகள் பற்றி யாது கூறுவீர்கள்?**

✦ **பதல்:-** சைவநெறியைப் பின்பற்றுகின்ற நாங்கள், சமூகத்தில் எவ்வாறு பங்கு கொள்ள வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். சமூகத்தை முன்னேற்றுவது தொடர்பில், எங்களுடைய இனத்திலே கல்வி அறிவற்றவாகள், ஊனமுற்றவர்கள், மனநோயாளர்கள் போன்றவர்களுக்கு ஆறுதலளித்து அவர்களையும் சமூகத்திலே இயன்ற ஒரு பங்களிப்பை ஆற்றுவதறகுரிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கடமை சமய நிறுவனங்களுக்கு உண்டு என்பதை நான் வெளிப்படுத்துகின்றேன்.

அத்தகைய ஒரு பணியையும் எமது ஆலயம் செய்து வருகின்றது என்பதையும் இந்த உலகம் அறிந்து கொண்டிருக்கின்றது. எனவே சமயமும் சமூகமும் பின்னிபபிணைய வேண்டும். இரண்டும் பின்னிப்பிணைந்து சமூகத்தை உயர்த்துவது, சமயத்தின் கடமையாக அமையவேண்டும். சமூகத்தை இன்றைக்கு உயர்த்த முனையாத நிலையிலே, எமது சைவசமயத்தைப் பொறுத்தவரை கோவில்களை நிர்வகிப்பதனை மாத்திரம் நம்பிக் கொண்டிருக்கின்றது. அதற்காக கோவிலை நம்ப வேண்டாம் எனச் சொல்லவில்லை. கோவிலை நமபுங்கள். கோவிலை மையமாக வைத்து மக்களுடைய வாழ்வையும் உயர்த்துங்கள் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

✦ **கேள்வி:- இந்தியாவிலே திருப்பதி ஆலயத்திலே, திருப்பதி தேவஸ்தானம் வைத்தியசாலை, பல்கலைக்கழகம் மற்றும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கின்ற தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. அந்தவகையில் ஒரு அரச நிர்வாகத்திற்கு நிகரான நிர்வாகமாக தேவஸ்தான நிர்வாகம் அமைந்துள்ளது. இவ்வாறு உங்களது கோவில் தேவஸ்தானத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குகின்ற வேலைத் திட்டங்களை எதிர்காலத்தில் முன் வைத்திருக்கிறீர்களா?**

✦ **பதில்:** பாரத நாட்டிலே அந்தத் தேவஸதானம் எவ்வாறு பணி செய்கின்றதோ அந்த வகையில் ஒரு சிறு பங்கையாவது நாங்களும் ஆற்றவேண்டும் என்பது எங்களுடைய குறிக்கோள். ஈழத்திலே எங்களுடைய துர்க்காதேவி தேவஸ்தானம் அந்தவகையிலே வைத்தியசாலைகளுக்கு மற்றும் நிறுவனங்களுக்கும் வேண்டிய உபகரணங்களை வாங்கிக் கொடுக்கின்ற பணிகளோடு, கல்வி நிறுவனங்களுக்கும், கல்வியிலே மேம்படாத வறுமைக் கோட்டிற்கு கீழ் கல்வி கற்கின்ற மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கும், உதவி வருகின்றோம். வருடாவருடம் ஓரளவிற்கு 20 இலட்சம் ரூபா வரையிலே நாங்கள் வெளிநிறுவனங்களுக்கு உதவி வருகின்றோம். கிளிநொச்சி வாழ் மக்களுக்கு நாங்கள் ஆற்றி வருகின்ற சேவையை இந்த நாடு அறியும். சென்ற வருடமும் வன்னியிலே வைத்தியசாலைக்கு 75,000 ரூபா அனுப்பினோம். வன்னியிலே கணேசானந்தபுர ஆச்சிரமம் என்று சொல்லப்படுகின்ற நிறுவனத்திற்கு 50,000 ரூபா அனுப்பினோம். கிழக்கு மாகாணத்திலே இயன்றளவு உதவிசெய்தோம். இப்படியாக உதவி செய்வதற்குரிய அந்தப் பணத்தை உலகமெங்கும் வாழும் எமது மக்கள மனமுவந்து எமக்கு அனுப்பிக் கொணடிருக்கின்றார்கள்.



சிவத்தமிழ் ஆராய்ச்சி நிலையம்

✦ **கேள்வி:- கலாசாரப் பேணுகையில் எமது கோவில்கள், மத நிறுவனங்கள் ஆற்ற வேண்டிய தொண்டுகள் என்ன?**

✦ **பதில்:** கலாசாரப் பேணுகைக்கு முக்கியமாக ஆலயங்கள் முன்னின்று உதவ வேண்டும். இன்றைக்கு சைவ மக்களைப் பொறுத்த மட்டிலே சைவத் திருக்கோவில்களிலே வருகை தருகின்ற பெண்களுடைய உடையணிகின்ற முறைகள் மிகவும் அருவருக்கத்தக்கவை. வெளிநாட்டு மோகங் கொண்டு தாங்கள் அந்த உடைகளை அணிகின்றோம் என்று சொல்லிக் கொண்டாலும், அவர்கள் கோவிலுக்கு வருகின்றபோது உடைகளை தமிழ்க் கலசாரத்திற்கு ஏற்ற முறைப்படி உடையணிந்து கொண்டு வரலாம். தமிழ்க் கலாசாரப்படி பெண்கள் உடையணிந்து வர வேண்டும் என எமது விளம்பரப் பலகையிலே போட்டிருக்கின்றோம். சேலை, தாவணி உடுத்து வரவேண்டும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு எத்தனை தரம் எடுத்தெடுத்துச் சொன்னாலும் எங்களுடைய இளம பெண் பிள்ளைகள்- (நான் மூத்தவர்களைச் சொல்லவில்லை) தமிழ்க் கலாசாரத்தை பின்பற்றுவதாகத் தெரியவில்லை. கோவிலுக்கு வரும்போது முன்பு சொல்வார்கள்- அர்ச்சனைத்தட்டு, கற்பூரம் கொண்டு சென்று கோவிலுக்குச் செல்ல வேண்டும் என்று. ஆனால், இன்றைகது கோவிலுக்கு வருகின்றபோது கொண்டு வருவது கமரா. அதை மாத்திரம் கொண்டு வந்து ஏதோ ஒருமுறை கும்பிட்டுவிட்டு வெளி வீதியில் இருந்து பலமுறை படம் எடுத்துக்கொண்டு போகின்ற கூட்டத்தை காணுகிறேன். கலாசாரச் சீரழிவு, சைவமக்களைப் பொறுத்த மடடிலே அதிகமாக இடம் பெற்றிருக்கின்றது என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் மூன்றுநேரமும் இந்தக் கலாசார ஒழுங்கு எமது கோவிலில் பேணவேண்டும் என்பதனை வலியுறுத்திக் கொண்டுவருகிறேன்.

✦ **கேள்வி:- சமூகப்பணியினை மேற்கொள்ளும்போது எவ்வாறான இடர்களை நீங்கள் எதிர்நோக்கினீர்கள். அவ்விடர்களை எவ்வாறு நீங்கள் கையாண்டீர்கள்?**

✦ பதில்:- சமூகப்பணிகளை மேற்கொண்டபொழுது இடர்கள் வராமல் இல்லை. எத்தனையோ இடர்கள் வந்துகொண்டு இருக்கின்றன. ஆலயப் பணத்தினை எடுத்துச் சமூகத்திற்கு உதவ வேண்டுமா? ஆலயப்பணம் ஆலயத்தினைக் கட்டுவதற்கு மாத்திரம் தரப்படுகின்ற பணம் அல்லவா? என்ற கடிதங்கள் கூட வந்து குவியும். அது மாத்திரமல்ல, ஆலயத்திலே குருக்கள்மார் மற்றும பணி செய்கின்றவர்களுக்கு இந்தப் பணத்தைப் பகிர்ந்து கொடுங்கள். சமூகப்பணிக்கு ஏன் இந்தப் பணத்தினைச் செலவுசெய்கின்றீர்கள் என்ற ஒரு எதிர்ப்புக் கூட்டமும் இங்கு இல்லாமல் இல்லை. இந்த வகையிலே, இவற்றை எல்லாம் சமாளித்து- ஆலயத்திலே பணிபுரிகின்ற அந்தணர்களையும் திருப்திப்படுத்தி, பணிபுரிகின்ற அலுவலர்களையும் சிற்றூழியர்களையும் திருப்திப்படுத்தி, அதற்கு மேலாக சமூகத்தையும் திருப்திப்படுத்துகின்ற ஒரு வாய்ப்பினை இன்றைக்கு பெற்றிருக்கின்றேன் என்பது, அம்பாளின் திருவருளையிட்டு எனக்கு கிடைத்த வெற்றி எனக்கூறி மகிழ்ச்சி அடைகிறேன்.

✦ **கேள்வி:- சமயப்பணி மூலம் சமூகப் பணியையே மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதி அல்லது நம்பிக்கை எவ்வாறு ஏற்பட்டது?**

✦ **பதில்:-** நான் ஆரம்பத்திலே மட்டக்களபபிலே சென்.சிசிலியா கத்தோலிக்க பாடசாலையிலே கல்வி கற்பித்தேன். தொடர்ந்து கொழும்பிலே, கொழும்பு பாத்திமாக் கல்லூரியிலே கல்வி கற்பித்தேன். பின்பு தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலே கல்வி கற்பித்தேன். முதலாவது கத்தோலிக்கப் பாடசாலை, இரண்டாவது முஸ்லிம் பாடசாலை, மூன்றாவது புரட்டஸ்தாந்துப் பாடசாலை. எனவே- இவ் வேற்றுமதக் கல்லூரிகளிலே கல்வ! கற்பித்த அனுபவத்தைக் கொண்டு அவர்கள் எவ்வாறு சமூகத்திற்குப் பணிபுரிந்தார்கள் என்பதை நான் ஓரளவு பயின்று கொண்டேன். அது உறுதிப்பாடாக என்னுள்ளத்திலே பதிந்துகொண்டது. அந்தப்பணியை ஏன் சைவமக்கள் செய்யக்கூடாது என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. அதன் விளைவாகவே, தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்திலே இப்பணியை மேற்கொள்ளக் கூடியதான ஒரு மனப்பாங்கு எனக்கு ஏற்பட்டது.

✦ **கேள்வி:- தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் மேற்கொள்ளும் சமூகப்பணிகள் எவை?**

✦ **பதில்:-** தெல்லிப்பளை தேவஸ்தானம 1982 ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற நிறுவனத்தை நிறுவ்யது. அதன் மூலமாகத் தாய் தந்தையர் அற்ற பெணபிள்ளைகள் இங்கு வளர்க்கப்பட்டு, அவர்கள் பல்கலைக்கழகத்திற்கும் சென்று கல்வி பெற்று, இப்போது பட்டத்துடன் திரும்பியிருக்கின்றார்கள். அதே வேளை- இப்பொழுதும் கல்வி கற்றுக் கொண்டு இருக்கின்றார்கள். மேலும், இராமநாதன் கல்லூரியிலே தங்கள் கற்றலோடு- கோலம்போடுதல், கவிதை புனைதல், பூமாலை கட்டுதல் என்பவற்றிலும் எமது இல்ல மாணவிகள் முன்னணியில் திகழ்ந்து வருகின்றனர். இவை மகளிர் இல்லத்தைப் பொறுத்த வரையில் நான் கூறக்கூடியவை.

அடுத்ததாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு துர்க்காபுரம் அன்னையர் இல்லம் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தோம். அதாவது- உதவியற்ற, வயது முதிர்ந்த பெண்களை ஆதரித்து, அவர்களை ஓரளவிற்கு இந்த நிறுவனத்திலே ஏற்று, அவர்களுக்குரிய பணிகளையும் எடுத்துக்காட்டி, அவர்களுக்குத் துணைபுரிய வேண்டும் என்ற நோக்குடனே இங்கு 15 முதிய அன்னைமார்கள் சேர்க்கப்பட்டார்கள். தற்பொழுது இவர்களது பணியினால் ஆலயத்திலே எவ்வளவோ சிறப்புக்கள் ஏற்பட்டிருகின்றன. இவர்களில் எல்லோரும் ஓரளவிற்குப் பணிபுரியக்கூடியவர்கள். பணிபுரிய முடியாத தளர்நிலை வந்தால், நீங்கள் உங்கள் உறவினர்களோடு போய்ச் சேரவேண்டும், உங்களது பணம் எதுவும் எமக்குத்தர வேணடாம், உங்களுடைய உறவினர்களுக்கு கொடுத்து உங்கள் இறுதிக் காலத்தை செம்மையாகக் கழிக்க வேண்டும் என உறுதியாகக் கூறியிருக்கிறேன்.

அடுத்ததாக- அறநெறிப்பாடாலை ஒன்றை சனி, ஞாயிறு நாட்களிலே நடாத்த! வருகின்றோம். இந்த துர்க்காபுரம் சூழலிலே வாழ்கின்ற 150 சிறார்கள் இங்கு வந்து அறநெறிப்பாடசாலையிலே- சனி, ஞாயிறுக்கிழமைகளில் 8.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை கல்விகற்று, அவர்கள் அறப்போதனைகளையும் பெற்று, நல்வழியிலே வாழ்வதற்குரிய ஆரம்ப நிலையைப் பெறுகின்றார்கள் என்பது மகிழ்ச்சியான விடயம்

மேலும், எமது பணி வைத்தியசாலைகளை நோக்கியும் இருக்கின்றது. தெல்லிப்பளை வைத்தியசாலையிலே மனநோயாளிகளுக்கு இயன்றளவு உதவிவருகின்றோம். இவ்வாறு தெல்லிப்பளை புற்று நோய வைத்தியசாலைக்கும் இயன்றளவு உதவுக! றோம்.

இப்பொழுது புற்றுநோய் வைத்தியசாலை மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளது. இது மகிழ்ச்சிக்குரிய விடயம். மேலும், யாழ். போதனா வைத்தியசாலையிலே சளி எடுக்கும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு முதன்முதலாக பணவுதவியினை வழங்கியதோடு, அந்த இயந்திரத்தையும் ஆரம்பத்து வைத்தோம். இந்த வகையிலே இயன்றவரை சமூகத்துடன் தொடர்பு கொண்டு எங்கள் பணிகளை தேவஸ்தானத்தின் மூலம் சமூகத்திற்கு வழங்குகிறோம என்பதே எமது தேவஸ்தானத்தின் மிகப் பெரும் பணியாகவும் இருக்கின்றது.

**நேர்காணல்:**
**வே. சேந்தன்**

விளம்பர அனுசரணை:- இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு



# சிவத்தமிழ்ச் செல்வி.கலாநிதி

# 78 ஆவது பிறந்

## மலரும் நினைவுகள்


சிவத்தமிழ்ச்செல்வி அன்னை தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் வாழ்க்கையில் சைவத்திற்கும், தமிழிற்கும், சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் பற்றிய கட்டுரைகள், நூல்கள் பல வெளிவந்தமை யாவரும் அறிந்ததே.

இந்த வகையில் அன்னை அவர்களின் வாழ்க் கையின் முக்கிய நிகழ்வுகளின் புகைப்படத் தொகு தியாக இச்சிறப்பிதழ் அமைகின்றது. 1970களில் இருந்து இன்றுவரை அன்னையின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளின் புகைப்படங்கள் காலக்கிரம வரிசையில் அமைந்துள்ளன.

புகைப்படங்களை வழங்கியுதவிய
ஆறு.திருமுருகன் மற்றும் கே.சிவபாலன்
ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.





1970களின் ஆரம்பத்தில் அன்னை.



'சிவத்தமிழ்ச்செல்வி' பட்டத்தை காரைநகர் மணிவாசகர் சபை அளித்த போது



மலேசியாவில் 1973 இல் கிராமங்களைச் சுற்றி வருதல்.




1981 சித்திரை துர்க்காதேவி ஆலய கும்பாபிஷேகத்தில் ஹரிதாஸ் சுவாமி அவர்களுடன்.



துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெற்ற சென்னை சித்தாந்த சமாச பவள விழாவிற்குத் தலைமை. (1981)




பெண்கள் தொண்டர் சபையின் இந்தியத் தலயாத்திரையில். (1982)



ஆலயத்தில் கொள்





தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்க வெள்ளி விழாவில் மறைந்த பேராசிரியர் துரைராசாவுடன்.



கௌரவ கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கை நோக்கி.



கௌரவ கலாநிதிப் பட்டத்துடன்.


மல்ரி - ஒயில் இன்டஸ்றீஸ் லிமிட்டட்
கே.கே.எஸ். வீதி,
இனுவில்.
தொ.பே.இல. 070-212390.

திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

யா/மகாஜனாக் கல்லூரிச் சமூகம்,
தெல்லிப்பளை.

விமாகி,
27/3, பவர் ஹவுஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

அருணோதயாக் கல்லூரிச் சமூகம்,
அளவெட்டி.

STP Comput
54
Ka

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்,
50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
தெல்லிப்பளை.

கணேசன் ஸ்ரோர்ஸ்,
201, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021-2830.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்,
41, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 2222063.

நியூ கமல் செரமிக்ஸ்,
37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021-2085.

ஜெய
20, கே.
சுன்

# ...நிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# ...ந்த நாள் சிறப்பு மலர்



...ல் 1973 இல் ...சுற்றி வருதல்.



1974இல் 'திருவாசகக் கொண்டல்' பட்டமளிப்பு - மலேசியா.



அதிபர் ரீ.ரீ.ஜெயரட்ணம் 'துர்க்கா துரந்தரி' பட்டம் வழங்கியபோது.



ஆரணி ஸ்ரீ கைலாயநாதர் கோவில் சைவ மங்கையர் மாநாட்டுக்குத் தலைமை. (1980)



கொழும்பில் நடைபெற்ற பொன்விழா நிகழ்வின்போது.



ஆலயத்தில் கொள்ளையிடப்பட்ட நகைகள் மீண்டும் கிடைத்தபோது.




துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையின் 15 ஆவது ஆண்டு விழாவின்போது.



லண்டனில் உள்ள சைவ முன்னேற்றச் சங்கத்தின் வரவேற்பின்போது. (1987)



...கலாநிதிப் பட்டத்துடன்.



நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத் திறப்புவிழா நிகழ்வின்போது.



இன்று அன்னை அவர்கள்.



...ம்,

STP Computer World (Pvt.) Limited
54A, Palaly Rd,
Kantharmadam,
Jaffna.

ஸ்ரார் கல்வி நிலையம்,
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்,
கிளை -
மல்லாகம் சந்தி.

விதுர்ஷிகா
நகையகம்,
1/5 B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சபா பல்பொருள்
விற்பனை நிலையம்,
பிரதான வீதி,
அச்சுவேலி.

யா/மல்லாகம்
மகா வித்தியாலய
பாடசாலைச் சமூகம்,
மல்லாகம்.

...ஸ்,

ஜெயகிரிஷ்ணா,
20, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

சந்திரா கிறீம் ஹவுஸ்,
துர்க்கையம்மன் கோவிலடி,
தெல்லிப்பளை.


குணம்
குளிர்களி அகம்,
பருத்தித்துறை,
சுன்னாகம்.

மங்கை சில்க்ஸ்,
8, நவீன சந்தை,
சுன்னாகம்.

சிறி கருமாரி
நகையகம்,
177 D, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



# சிவத்தமிழ்ச் செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 78 ஆவது பிறந்த நாள் சிறப்பு மலர்



## ஆயிரம் திருநாமம் பாடி...

ஒரு நாமம் ஓர் உருவம்
ஒன்றுமிலாய்! ஆயிரம்
திருநாமம் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டுகிறோம்.

தாய்தந்தை, பெயர் சூட்டத்
தலைவனுனக் கின்மையினால்
வாய் தந்த பெயரையெல்லாம்
வைத்துன்னை அழைக்கின்றோம்.

அரன் என்றழைப்பினும்
வரன் கொடுப்பவன் நீ
அரியென் றிசைப்பினும்
சரியென் றிசைப்பாய்
கர்த்தன்என் றுரைப்பினும்
அர்த்தம் நீதான்
அல்லா எனினும் நீ
அல்லாது வேறு யார்?

பாகுபெயரோ பாகற்
காய்ப்பெயரோ எப்பெயரும்
ஆகுபெயர் தான் உனக்கு
ஆகாத பெயருண்டோ?

இடுகுறியாய்ச் சொல்வதற்கோ
இயற்பெயர் ஒன்றில்லாதாய்
தொடு குறியாய் நாக்குவிரல்
தொட்டதெல்லாம் உன்பெயரே!

காரணப்பேர் வைப்பதென்றால்
காரியங்கள் ஒன்றிரண்டா?
தோரணம்போல் மொழிக்கொடியில்
தோன்றாதோ பலகோடி?

காலமெனும் ஏட்டில்
கதையெழுதிக் குவிக்கின்ற
மூலஎழுத் தாளன் நீ
முளைத்து வந்த பாத்திரம் நாம்
ஒரு கோடி புனை பெயர்கள்
உனக்கு நாம் சூட்டுகிறோம்.

பாவை அருகிருக்கப்
பஞ்சணையும் காத்திருக்கத்
தேவை என்ற காரணத்தால்
தேன் என்றும் மான் என்றும்
கண்ணென்றும் கனியென்றும்
கரும்பென்றும்,
அவள் வெறும்
பெண்ணென்று தெரிந்திருந்தும்
பேர் நூறு பிதற்றுகிறோம்
சிற்றின்பச் சிலிர்ப்புக்கே
இத்தனைபேர் தோன்றுமென்றால்
பேரின்ப போதையிலே
பெயர் கோடி குவியாதோ?

மௌன அழைப்புக்கே
வந்துவிடும் காதலன் நீ
பெயர்க்கைகள் அசைக்கின்ற
பேதைகள் நாம்! மன்னிப்பாய்!

உயர் மௌனப் பொருளே!
ஒலிச் சந்தைக்காரர் நாம்
பெயர் நாணயங்களால்
பேரம் உனைப் பேசுகிறோம்

நின்னைப் பேர் இட்டழைக்க
நீ என்ன சின்னவனா?

சின்னச் குழந்தைகளின்
சிறு மழலை விரும்பாயோ?

எங்கள்
முறையீட்டு மடல்களுக்கு
முகவரி தேவையென்று
இறைவனே நாமுனக்கு
ஏதோ ஓர் பேர்வைத்தோம்

எங்கள் முகவரிக்கும்
மேற்பார்வை முகவரி நீ
உன் பெயரில் முடிகின்ற
பெயரெச்சம் நாமெல்லாம்

எங்கள்
நாக்குகளில் மட்டுமா உன்
நாமம்? உயிரினத்தின்
மூக்கெல்லாம் உன்பெயரை
மூச்சாக முணுமுணுக்கும்
இலைகளெல்லாம் உன் பெயரை
இசைக்கின்ற நாவுகளே
மலரின் இதழ்களிலே
மணமே உன் பெயராகும்

ஆத்திகர் நாவினில் நீ
அமர்ந்திருத்தல் வியப்பில்லை
நாத்திகரின் நாவினிலும்
நடம் புரியும் நாயகன் நீ
'இல்லை' எனும் பெயரே
இறைவா! அவருனக்குச்
சொல்லுகின்ற பெயரென்றால்
எல்லையுண்டோ உன்பெயர்க்கே!

'கவிக்கோ' அப்துல் ரகுமான்


ANNA Coffee



அண்ணா கோப்பி
ANNA INDUSTRY - INUVIL.
TEL : 021 - 2223565. 070 - 212298

வினைல்ஸ் இன்ஸ்ரிரியூட்
கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம்.

C.C.A.
கல்வி நிலையம்
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது
ISO 9002 தரம் பெற்றது
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ராம்கோ

சுந்தர்ஷன்
மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி,
மானிப்பாய்.
தொ.பே.இல. 2222751

சிட்டிசன்
138, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.


## அன்றிருந்தவை இன்றில்லை



எகிப்தில் புராதன காலப்பகுதி குரங்கினம்



ஜேர்மனியில் காணப்பட்ட வேறுபட்ட முகவமைப்புடைய குரங்கினம். புதைபடிவுகளில் இருந்து இவை பூச்சியினங்களை உண்டும் வாழ்ந்துள்ளமை அறியப்பட்டுள்ளது.



மொங்கோலியா, அமெரிக்கப் பகுதிகளில் ஒரு காலத்தில் ஆட்சியாக இருந்த விலங்கினத்தின் எலும்புத் தொகுதி.




# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த

### அரங்கம் 14



நாடோடியாகத் தோன்றும் சார்லி ஒரு நிலையான இழப்பாளி. ஆனால், இறுதியில் அவரே வெற்றி பெறுவார். ஏழைக்கும்- பணக்காரர்களுக்கும், வெற்றி பெற்றவர்களுக்கும்- தோற்றவர்களுக்குமிடையே இருக்கும் இடைவெளியை அகற்றப் பாலமாகவிருக்கிறார். பல தொல்லைகளுக்கிடையே வெற்றிவாகை சூடும் மனிதனாகத் திகழ்ந்தார். குறைந்த வசதி உள்ளவர்களின் மதிப்பை உயர்த்துவதோடு, முடிவில் அவர்களால் நிச்சயம் வெற்றிபெறமுடியும் என்பதை அறிந்து, அவர்களுக்குத் தங்களைப் பார்த்தே சிரித்துக்கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்தார். இந்தக் குணம்தான் நாடோடிக்கு உலகப்புகழ் வாங்கித்தந்தது. பார்வையாளர்களிடமிருந்த எல்லாவித சமூகக் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்தது.

1914 இல், முதல் உலகப்போர் வெடித்தது. சார்லி அமெரிக்காவைச் சேர்ந்தவரல்ல என்பதால் பிரிட்டனுக்குத் திரும்பி, தன் நாட்டிற்காகப் போரிடவேண்டும் என்று சிலர் கருதினர். ஆனால், மற்றவர்கள், ஒரு போர்வீரர் செய்ய முடியாததை- சிரிப்பையும், அந்த இருளான நாட்களில் நம்பிக்கையையும் அமெரிக்க நாட்டிற்கு ஏராளமான பணத்தையும் கொடுப்பதன்மூலம் - சார்லியினுடைய படங்கள் செய்தன என்று நினைத்தனர்.

தனக்குத் தெரிந்தமுறையில் போரில் பங்கெடுத்துக் கொண்டார் சார்லி. ஒரு திரைப்படத்தை உருவாக்கினார். தற்போது **First National** படக் கம்பெனியுடன் இருந்த சார்லி, 1918, மேயில் "ஷோல்டர் ஆர்ம்ஸ்," என்ற படத்தினை எடுக்க ஆரம்பித்தார். போர் துவங்கி நான்காண்டுகள் கழிந்திருந்தன. போர்க்கால அகழிகளில் நகைச்சுவைக் காட்சிகளை அமைப்பது என்ற திகைக்க வைக்கும் முடிவினை எடுத்தார் சார்லி.

அதுவரை முக்கால்வாசி படங்கள் தனித்தனி சம்பவங்களின் தொடராக அமைக்கப்பட்டிருந்தன. இப்போது திரைப்படங்கள் மேடை நாடகங்களைப் போல் சீராக வடிவமைக்கப்படத் துவங்கின. மேலும், அவை மக்களுக்கான பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே இல்லை.

'ஷோல்டர் ஆர்ம்ஸின்' கதை சார்லியின் மனதில் தெள்ளத்தெளிவாக இருந்ததால், அதை மிக வேகமாகப் படமாக்கினார். ஒவ்வொரு காட்சியிலும் அருமையான நகைச்சுவை. அறுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இந்தப் படச்சுருள்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை 'அன்நோன் சாப்ளின்' என்ற தொலைக்காட்சிச் செய்திப்படத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஒரு மாதத்திற்குப் பிறகு அதுவரை படம் பிடித்திருந்ததையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு புதிய அரங்கமைப்புகளுடன் மீண்டும் புதிதாகப் படம் எடுக்கத் தொடங்கினார்.

# சார்லி சாப்ளின்

ஒவ்வொரு போர்வீரனும் போர்க்களத்தில் சந்தித்த உண்மைகளை - முடிவில்லாத சேறு, தண்ணீர் தேங்கின போர்க்கால அகழிகள், பேன்கள், எலிகள், தொடர்ந்த குண்டுவீச்சு, பயம் - எடுத்துக்கொண்டு, போரின் மடமைகளை நையாண்டி செய்யும் நகைச்சுவையாக மாற்றி அமைத்துவிட்டார்.

முதலாம் உலகப்போர் நிறுத்தப்படுவதைக் குறிக்கும் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு ஒருமாதத்திற்கு முன்பு, 1918, அக்டோபரில் 'ஷோல்டர் ஆர்ம்ஸ்' திரையிடப்பட்டது. போரில் இருந்து திரும்பிய வீரர்கள் அந்தப் படத்தை மிகவும் விரும்பினர். அவர்கள் தங்களை 'ப்றெட் கர்னோவின் படை' என்று அழைத்துக்கொண்டனர். போரில் பைத்தியக்காரத்தனங்களைக் கண்டு நகைப்பதைத் தவிர அவர்களால் தற்காப்புக்காக எதுவும் செய்யமுடியவில்லை.

(அடுத்த அரங்கில் தொடரும்)

தன் சொந்த நாடான ஆர்ஜன்டீனாவில் கோல்வ் விளையாடும் 'சே குவாரா.





கியூபாவில் அதிபர் பிடல் கஸ்ரோ உரைநிகழ்த்துகின்றார். (1960)



1960 இல் சே குவாரா- உலகில் மிக அதிகம் பிரதிகள் செய்யப்பட்ட படம் இது. உள்ளே - இத்தனை படங்களையும் பதிவு செய்த அல்பேட்டோ கோர்டா.

# மனிதக் குளோனிங் முறை சாத்தியமா?



டோலி ஆட்டுக்குட்டி

1997இல் டோலி என்ற குளோனிங் முறையிலான ஆடு பிறந்தது முதல், குளோனிங் என்ற பதம் பரவலானது - பிரபலமானது. டோலி ஆட்டுக் குட்டியே முதிர் கலத்திலிருந்து முதலில் தோன்றிய விலங்கினம். 1970 இல் இத்தகைய ஆய்வைத் தவளையில் செய்தனர். முதிர்தவளை ஒன்றின் கலத்தை விருத்திசெய்து வாற்பேத்தையை (Tadpole) உருவாக்கி அதன்மூலம் தாய்த் தவளை போன்ற பிரதியை - தவளையைப் பெற்றனர்.

ஆறுவயதான ஈவி என்ற தாய் ஆட்டின் பால்சுரப்பியிலிருந்து எடுக்கப்பட்ட கலத்தினை வளர்த்து, டோலியை உருவாக்கிய பின்னே, குளோனிங் விலங்குகளுக்கும் பயன்படும் என்பது கண்டறியப்பட்டது. தற்போது இறந்த டைனசோரிலிருந்து மனிதக் குழந்தைவரை குளோனிங் முறை பரவவுள்ளது.

1995 காலப்பகுதியில் பூனை, நாய், பன்றி, எலி எனப் பலவிலங்குகளும் குளோனிங் முறைக்குட்படுத்தப்பட்டபோதும் நல்ல வெற்றி எதையும் அவை பெற்றுக்கொடுக்கவில்லை.

ஏன் இப்படி நடந்தது? உண்மையில்- குளோனிங் முறையில், கருவைக் கலத்திலிருந்து கலத்துக்கு இடமாற்றும் (Nuclear Transfer) முறையே முக்கியமானது. ஆனால், இம்முறையை ஆய்வுகூடங்களில் செய்யும்போது ஏற்படும் சிறு அதிர்வு - அதிர்ச்சி கூட - கலங்களைச் சிதைத்துவிடும். அப்படியில்லாது கலங்கள் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டாலும், கலங்களின் பாதுகாப்புக்கு சுற்றிணைக்கப்படும் பாதுகாப்புச் சேர்வைகளின் சிறியஇரசாயன மாற்றங்கள் கூட, அது வளரும் கலங்களை அழித்துவிடும்.

சாதாரண இனப்பெருக்கத்தின்போது முட்டையாயினும் சரி, விந்துக்கலங்களாயினும் சரி- அவை உடல் இரசாயன - ஓமோன்களால் பதப்படுத்தப்பட்டு அதன்பினபே ஒன்று சேருகின்றன. ஆனால், இந் நிலை குளோனிங் முறையில் - இயற்கையாகக் கிடைக்காமையால் குளோனிங் முறை பிசுபிசுத்துவடுகிறது. இவை எல்லாவற்றையும் தாண்டியே அதிர்ஷ்டவசமாக டோலி போன்ற விலங்குகள் பிறக்கின்றன.


ஏன் டோலி கூட தற்போது மூட்டுவாத நோயினால அவதியுறுவதற்குக் குளோனிங் முறையில் எங்கோ ஏற்பட்ட சிறு தவறே காரணம் எனக் கூறப்படுகிறது. இத்தகைய குளோனிங் இடர்களைக் கண்டும்கூட உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகள், குளோனிங் முறையை - பழைய தொழில்நுட்ப முறையை - தொடர்ந்தும் கையாண்டு மனிதக் குளோனிங் குழந்தைகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குளோனிங் முறையில் உருவாகும் விலங்கினங்கள் ஒத்தவை போன்று தெரியலாம். ஆனால், மனிதக்குழந்தைகள் குளோனிங் முறையில் பிறப்பினும், அவற்றில் நிச்சயம் வேறுபாடு நடத்தையில் தெரியும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

அன்னை தெரேசாவின் உடற்கலத்திலிருந்தோ, ஐன்ஸ்டைனின் உடற்கலத்திலிருந்தோ கலங்களைப் பிரித்து குளோனிங் முறையில் குழந்தைகளை உருவாக்கினால் கூட, அவர்களின் நடத்தைக்கோலம் நிச்சயம் இப்பெரியார்களைப் போன்று இருக்கப்போவதில்லை என்கின்றனர் சில ஆய்வாளர்கள்.

# திரை விமர்சனம்

## மௌனம் பேசியதே



வழக்கமான ஆங்கிலச் சொற்கள் இல்லாத அழகான கவிதைத் தலைப்பு, பிரபலமான பாடல்கள், நந்தா என்னும் படத்தைத் தந்த பிரபலமான தயாரிப்பாளர், திறமையான இயக்குநர் பாலாவின் சிஷ்யர் அமீரின் இயக்கம்- இவையெல்லாமே "மௌனம் பேசியதே" பற்றி எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்துவிட்டன.

படத்தின் தொடக்கத்திலிருந்தே பாலாவின் பாதிப்பை அமீரின் இயக்கத்தில் காணமுடிந்தது. வியாபார நோக்கத்தோடு மசாலாவையும் கலந்து தெளித்திருக்கிறார் அவர்.

சூர்யா - முதிர்ச்சி தெரியும் நடிப்பு. பெண்களையும் காதலையும் வெறுப்பதை அவர் வெளிப்படுத்துவது நல்ல நடிப்பு. ஆனால், திரிஷாவுடன் கண்டதும் காதல் கொள்வது - வழக்கமான தமிழ்ப் படப்பாணியில் இருந்து மாறவில்லை.

திரிஷா அடுத்த வீட்டுப் பெண்ணாகப் பொருத்தமான பாத்திரப் படைப்பு. தனது பாத்திரத்திற்குக் குறைவாகவோ, மீறியோ நடந்து கொள்ளாமல், இயல்பாக நடித்திருக்கும் அவர் பாராட்டுக்குரியவர். ஆனால், அவரது கதாபாத்திரத்திற்குப் படத்தில் பெரும் முக்கியத்துவம் இல்லாதது பெரிதும் குறை.

ஒளிப்பதிவாளர் ராம்ஜி அழகான காட்சியமைப்பை வடித்திருந்தாலும், ஏனோ சில இடங்களில் சறுக்குகிறார்.

இளையராஜாவின் மகன் யுவன்சங்கர் ராஜாவின் பின்னணி இசையும் பாடல்களும் அருமை. படத்தின் "Theme Music" கொஞ்சக் காலத்திற்கு அனைவரையும் வசீகரிக்கும் என்பது உண்மை. இந்தப் படத்தின் பாடல்கள் திடீரென தமிழகத்திலிருந்து நியூசிலாந்துக்கோ, அவுஸ்ரேலியாக்கோ பறந்து செல்லாதது திருப்தி தருகிறது. வில்லன்களே இல்லாத, செயற்கைத் தன்மையற்ற இந்தப் படம்- இன்னும் கொஞ்சம் அழகாகச் செதுக்கப்பட்டிருந்தால் தரமான படம் என்னும் வரிசையில் நிச்சயம் இடம்பெற்றிருக்கும்.

- சுகதினி

# 2025 ஆம் ஆண்டில்



நிலவுக்கும் செவ்வாய்க் கிரகத்திற்கும் அடுத்து வரும் தசாப்தங்களில் மனிதர்களை அனுப்ப ஐரோப்பா திட்டமிட்டுள்ளது. இதற்காக ரோபோக்கள் கட்டுப்படுத்தும் ஒரு தங்குமிடத்தைச் செவ்வாயில் அமைக்க உறுப்புநாடுகள் பரிசீலித்து வருகின்றன. ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் 2025 ஆம் ஆண்டில் அப்போதிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கொண்டு, மனிதனைச் செவ்வாய்க்கு அனுப்பமுடியும் என நம்புகின்றது. ஆரம்பத்தில் இரு செயற்கைக் கோள்களைச் செவ்வாய்க்கு அனுப்பி, அங்குள்ள மண் மாதிரிகளை எடுத்துச் சோதித்து, தரையிறங்குவதற்குச் சாதகமான பகுதிகள் எங்கெங்கு செவ்வாயில் உள்ளன என அறியத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மனிதனை அனுப்புவது குறித்து 2015 ஆம் ஆண்டிலேயே இறுதி முடிவு எடுக்கப்படும்.

## செவ்வாயில் மனிதன்

# உள்ளுக்குள்ளே சொல்லப்பட்ட செய்தி!


நாம் எமது எல்லா நடமாட்டங்களிலும் மற்றவருக்குச் செய்தி கொடுக்கின்றோம். நாம் உட்கார்ந்திருக்கும் விதத்தில் எல்லாம் அர்த்தமுண்டு. ஆகவே, நிகழ்ச்சியை அதன் பின்னணியிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது பிழை.

தமது கருத்தை மற்றவருக்கு நேரடியாகக் கூறத் தெரிவதில்லை. மனதின் உந்துதலால் நடமாடுகிறோம். அதன்மூலம் நாம் மற்றவரைப் புரியப் பழகவேண்டும். எமது வார்த்தையால் மட்டுமல்ல- எமது நடை, உடை, பாவனை, குரல், பார்வை போன்றவற்றில் வரும் செய்தியை அறிய வேண்டும்.

ஒருநாள் வீட்டில் மனைவியின் தாயார் மருமகனுக்குக் கூறினார். "உங்களது மாமா அதாவது எனது கணவன்- முன்பு குசினியில் இரண்டு மூன்று முறை என்னைச் சுற்றித் திரிந்தால், அவருக்குப் பசி வந்துவிட்டது என நான் அறிந்து விடுவேன்" என்றார். இங்கே மாமாவை மாமி புரிந்துள்ளார்.

வார்த்தையில் கூறும் செய்தியையும், வார்த்தையில் நேராகக் கூறாவிடினும் நடமாட்டத்தில் தரும் செய்தியையும் நன்றாகப் புரிந்துகொள்பவரை மற்றவர்கள் நெருங்குவார்கள். தன்னைப் புரிந்தவர்களிலேயே அதிகம் அன்பு வைப்பார்கள்.

நாம் மற்றவருக்குச் செவிசாய்ப்பது கடினமான ஒன்றாகும். ஆனால், கதைப்பது இலகுவானது. இறைவன் எமக்கு இரு செவிகளையும் ஒரு வாயையும் தந்ததில் அர்த்தமுண்டு. குறையப் பேசி, அதிகமாகச் செவிசாய்க்க வேண்டும் என்பதற்கேயாகும். சிலர் செவிசாய்ப்பது போல் நடிப்பர். இதுவும் பிழை. மற்றவர் சொல்லிலும், நடமாட்டத்திலும் எமக்கு உணர்த்தும் செய்தியில் உளந்திறக்க வேண்டும். செவிசாய்க்கும்போது மற்றவர் அந்த நிகழ்ச்சியை அனுபவித்த அனுபவத்துக்குக் கற்பனையில் சென்று மற்றவரைப் புரிந்துகொள்ள முயலவேண்டும். அப்பொழுதுதான் செயற்பாட்டுடன் காதுகொடுத்தேன் என்று பொருள்.



பெரும்பாலும் செவிசாய்க்கும்போது மேலேயுள்ள செய்திக்கு மட்டுமல்ல உள்ளேயுள்ள செய்திக்கும் செவிசாய்க்க வேண்டும். வெளியே கொடுக்கும் செய்தி ஒன்று. உள்ளேயுள்ள செய்தி வேறொன்றாக இருக்கும். உதாரணமாக ஒருநாள் கணவனும் மனைவியும் மூத்த மகனும் காரில் சென்று கொண்டிருந்தனர். மூத்த மகனே காரை ஓட்டிச் சென்றார். அவர் கார் ஓட்டுவதில் புதுப் பழக்கமானவர். அம்மா திடீரென "மகன் , அதிலே தூரத்தில் வருவது பஸ்ஸா, லொறியா" என்றார். அருகிலிருந்த கணவன் மனைவி கூறிய வார்த்தையின் மேலோட்டமான அர்த்தத்தை மட்டுமல்ல உள்ளேயுள்ள அர்த்தத்தையும் புரிந்து விட்டவராக "உங்களுக்குச் சரியான பயமாக இருக்குத்தானே" என்றார். "உங்களுக்கு அது எப்படித் தெரிந்தது" என்று மனைவி ஒத்துக் கொண்டார். இங்கே லொறியா பஸ்ஸா என்பதல்ல "பார்த்துக் கவனமாக ஓட்டு" என்பதைப் பயத்தோடு "பஸ்ஸா, லொறியா" எனத் தாய் கூறினார்.

அதே போன்று வேலை முடிந்து வீட்டுக்கு வந்த கணவன்- உடைகளை மாற்றித் தேநீர் குடித்து விட்டுப் பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்தார். அருகேவந்த மனைவி, "ஈழநாடு பேப்பரா பார்க்கிறீங்கள்?" என்றாள். அவள் கூறிய கூற்றின் உள்ளே இருந்த அர்த்தத்துக்குச் செவிசாய்த்த கணவன், உடனே பேப்பரை மூடிவைத்து விட்டு"அருகிலே உட்காருங்கள் கதைப்போம்" என்றார். இங்கே மனைவிக்கு, ஈழநாடு பத்திரிகை என்பது தெரியும்.என்னோடு கொஞ்சம் கதைப்பீங்களா? என்பதைச் சொல்லாமல், ஈழநாடா பார்க்கிறீர்கள்? என்று கூறினாள்.

ஆகவே- மற்றவரது உணர்வு மட்டுமல்ல, மற்றவரின் நடமாட்டத்தின் பின்னணியைப் புரிவது மட்டுமல்ல, செவிசாய்ப்பதும் முக்கியம். வெளியேயுள்ள செய்திக்கும் உள்ளேயுள்ள செய்திக்கும் செவிசாய்க்க வேண்டும்.

- எஸ்.ஜே. யோகராஜா

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
சந்தர்ப்பங்கள் எவருக்காகவும் காத்திருப்பதில்லை.
- நியூமன்

# நமது நோக்கு

## உறுதியும், நம்பிக்கையும் வெளிப்படுத்த வேண்டிய கட்டம்!

தமிழ் மக்களின் தரப்பிலிருந்து உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய தேவையைக் கொண்டிருக்கும்- மீள்குடியேற்றம் தொடர்பாக, நல்லதொரு முடிவொன்றைத் தரவேண்டிய கட்டாயத்திற்கு அரசாங்கம் ஆளாகியிருக்கிறது.

மக்களின் இயல்பு வாழ்க்கையின் அவசியமும் - அதற்காக மேற்கொள்ளவேண்டிய அத்தியாவசியப் பணிகளில், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றமும் - விடுதலைப் புலிகளால் அரசாங்கத்தரப்பிடம் வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில் - சமாதானத்திற்கான முயற்சிகளை முன்னேற்றுவதற்காக, தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்னும் பெயரில், தமிழர்களது குடிமனைகளையும், விளைநிலங்களையும், தொழில் மையங்களையும், வழிபாட்டுத் தலங்களையும், கல்வி நிறுவனங்களையும் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு - 'பேரம் பேசுவதில்' ஈடுபட்டு வந்த இராணுவத்தரப்பின் நியாயந்தவறிய நடத்தைகளனால்,

- அமைதிக்கான அடித்தளமே ஆட்டங்கண்டு வருகிறது என்ற உண்மை அரசாங்கத்தினால் உணரப்பட்டிருப்பதை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் - 'சிரச' தொலைக்காட்சி மூலமான, நாட்டு மக்களுக்கான உரை எடுத்துக் காட்டுகின்றது.

குறிப்பாக - முகமாலைச் சந்திப்பும், அதன் தொடர்ச்சியாக யாழ்.பிராந்திய இராணுவத் தளபதி வெளியிட்ட நிபந்தனைகள் நிரம்பிய திட்டவரைபும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் - இராணுவத் தளபதி ஆகியோர் வெளியிட்ட கருத்துக்களும் - அமைதிச் சூழலை, கட்டியெழுப்பப்பட்டு வந்த புரிந்துணர்வை, முன்னேற்றம் கண்டு வந்த நட்புறவை - வெகு இலகுவில் சீரழித்துவிடும் என்பதை அராசங்கம் உணர்ந்து கொண்டதான வகையிலேயே கடந்த சில நாட்களில் அதன் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

விடுமுறைக்கு வெளிநாடு சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு திரும்பியதும் - அலரி மாளிகையில் பாதுகாப்பு உயர்பீடத்தைக் கூட்டி - இராணுவத்தரப்பின் அணுகுமுறையை மிகக்கடுமையான வார்த்தைகளால் சாடியதிலிருந்து, நேற்று முன்தினம் விடுக்கப்பட்ட நாட்டு மக்களுக்கான உரை வரை - சமாதான முயற்சிகள் சறுக்கிவிடுமோ என்ற பதற்றம் அரசாங்கத்தரப்பில் ஏற்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

இதன்மூலமாக - படைத்தரப்பின் கடும்போக்கும், பிடிவாதமும் - அமைதிக்குத் தீவிர அச்சுறுத்தலாக இருப்பதை புரிந்துகொண்ட நிலையிலிருக்கும் அரசாங்கம், இனிமேலாவது உறுதியான முடிவுகளை, இவ் விவகாரத்தில் மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

அரசாங்கம் - இனியும் இவ்விடயத்தில் தாமதிக்குமானால் அல்லது முடிவுகளுக்குப் பின்னடிக்குமானால்- உபகுழுக் கூட்டங்கள் மட்டுமன்று, பிரதானமான உயர்மட்டச் சந்திப்புக்களும் பாதிக்கப்படுமென்பதை விடுதலைப் புலிகள் தெளிவாகவே எடுத்துக்கூறியிருக்கின்றனர்.

இதனையே - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், அரசியற்துறைப் பொறுப்பாளரும் அழுத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

இராணுவத்தரப்பின் பக்கமை மனோபாவத்தையிட்டுத் தாம் கடும் அதிருப்தி கொண்டிருப்பதாகவும், இந்நிலை தொடருமேயானால் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரமுடியாதுபோகும் என கலாநிதி அன்ரன் பாலசிங்கமும்,

மீள்குடியமர்வு போன்ற இலகுவாகத் தீர்க்கப்பட வேண்டிய விவகாரங்கள் தீர்க்கப்படாமல், சுமுக நிலை தோன்றாமல் அடுத்த கட்டங்களுக்கு நகர முடியாது என சு.ப.தமிழ்ச்செல்வனும் அறுதியிட்டுக் கூறிவிட்டனர்.

எனவே - உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு என்னும் விடயத்திற்குப் பரிகாரம் காணவேண்டிய பொறுப்பும், அதேவேளை - இப்பிரச்சினைத் தீர்வினூடாக - இன்னுமின்னும் நகரவிருக்கும் அடுத்து வரவுள்ள சிக்கற்கட்டங்களைத் தீர்க்க எவ்வாறான உறுதிப்பாட்டை அரசாங்கம் கொண்டிருக்கின்றது என்பதை வெளிப்படுத்தவேண்டிய கடமைப்பாடும் அரசாங்கத்திடம் உடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

---

'புத்தரின் பெயரால்' திரைப்படம்

# லண்டனில் திரையிடப்பட்டமைக்கு பிரிட்டிஷ் மீது இலங்கை கண்டனம்

(கொழும்பு)

'புத்தரின் பெயரால்' (**In the name of Budha**) என்ற திரைப்படம் லண்டனில் திரையிடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாகத் தனது கண்டனத்தை, பிரிட்டிஷ் அரசிற்கு தெரிவித்திருக்கிறது.

இப்படம் - இலங்கையில் புத்தரின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்குமுறைகளைச் சொல்வதால், அது பௌத்த மதத்திற்கான இழுக்காக அமைந்துள்ளதாக இலங்கைத்தரப்பிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இப்படத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் லண்டனிலுள்ள இலங்கைத்தூதரகம், அங்குள்ள ஏனைய பௌத்த நாடுகளான தாய்லாந்து, ஜப்பான், மியன்மார் ஆகியவற்றின் தூதரங்களின் உதவியையும் நாடியுள்ளது.

இதேவேளை, இத்திரைப்படம் இந்திய அமைதிப் படை செய்த அட்டூழியங்களையும் சித்திரிப்பதால் - இந்தியத் தூதரகத்தின் உதவியும், எதிர்ப்பைக் காட்டுவதற்காகக் கோரப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் பாயிஸ் முஸ்தபா- பிரிட்டிஷ் சுற்றுலாத்துறை மற்றும் திரைப்பட, ஒலிபரப்புத்துறை அமைச்சர் டாக்டர். கிம் ஹோவெல், பண்பாடு, ஊடகம் மற்றும் விளையாட்டுத்துறைகான திணைக்களத்தலைவர் கே.கிப்பியாஸ் ஆகியோரையும் இது தொடர்பாகச் சந்தித்துப்பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீளக்குடியமர அனுமதிக்க மறுத்தால் நாமாகவே சென்று குடியமர்வோம்!

## விநாயகமூர்த்தி எம்.பி கண்காணிப்புக்குழுவிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலே அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இல்லாதபோது, மக்களை மீளக்குடியமர அனுமதிக்க மறுப்பது மிகப்பெரிய அடிப்படை மனிதஉரிமை மீறல் என அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று, வலி-வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வலி-வடக்கு பிரதேச செயலகத்தின் முன்பாக நடந்த மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தின்போது, அங்கு வருகை தந்த யாழ்ப்பாண மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதியிடம் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக அரசிடமிருந்தோ அன்றிப் பாதுகாப்புத் தரப்பிடமிருந்தோ சாதகமான பதில் விரைவில் கிடைக்காவிட்டால், நாம் நேரடியாகச் சென்று மீளகுடியமர்வதனைத் தவிர வேறுவழியில்லை எனவும் தெரிவித்தார்.

(கி,ச)

# உப்புக் கூட்டுத்தாபன ஊழியருக்கு 5 வருட சம்பளப் படிகள் இல்லை

## பெற்றுத் தருமாறு ஊழியர்கள் கோரிக்கை

(கரணவாய்)

ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கடந்த 5 வருடகாலச் சம்பளப்படிகள் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட கூட்டுத்தாபன ஊழியர்கள் - இது தொடர்பாக இந்துகலாசார அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

உப்பளத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களை 1990 ஆம் ஆண்டிலிருந்து உப்பளத்தை விட்டு வெளியேற்றியதால், அவர்கள் அகதிகளாக்கப்பட்டு அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எதுவித கொடுப்பனவுகளும் கிடைக்கவில்லை.

உப்பளத்தின் உயர் அதிகாரிகள் உப்பள ஊழியர்களின் நலன்களில் எதுவித அக்கறையும் காட்டவில்லை. மாறாக, உப்புத் தொழிலாளர்களிடம் இருந்து பணம் சுரண்டும் நடவடிக்கைகளில் அதிகாரிகள் பல தடவைகள் ஈடுபட்டுள்ளார்கள்.

1998/99 ஆண்டுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக உப்புத் தொழிலாளர் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இது தொழிலாளர்களிடம் மேலும் பணம் பறிக்க உயரதிகாரிகளால் பரப்பப்பட்ட வதந்தி எனக்கருதுகிறோம்.

உப்பள ஊழியர்களின் நியாயபூர்வமான உரிமைகள் மறுக்கப்படுவதாக நாங்கள் கருதுகிறோம், இது முற்றுமுழுதாக அடிப்படை மனித உரிமை மீறல் என்பதனை எடுத்துக் காட்டவிரும்புகிறோம். எமது சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் முழுமையாக எமக்குக் கிடைக்க வழி செய்யுங்கள்.

உப்பள ஊழியர்களின் இவ் அவல நிலைமையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி ஆகியோருக்குத் தெரியப்படுத்த உதவி செய்யுங்கள். எனவும் அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(லி,ரா)

# தன்னைத் தானே சுட்டு கடற்படைச் சிப்பாய் மரணம்

(கொழும்பு)

கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொழும்புத் துறைமுகக் கடற்படைத் தளத்தில் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

எட்டு மாதங்களுக்கு முன்னர்,கடற்படையில் சேர்ந்துகொண்ட பொயாகொட, கேகாலையைச் சேர்ந்த புத்திக பிரதிலால் ஜெயவர்த்தன (20 வயது) என்ற சிப்பாயே தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டவராவார்.

கொழும்புத்துறைமுகத்தில் உள்ள கொள்கலன்களைச் சோதனையிடச் சென்ற மேற்படி சிப்பாய் திரும்பி வரவில்லை. பின்னர், வெடிச்சத்தம் கேட்டபோது தேடிச் சென்ற ஏனைய சிப்பாய்கள், தனது ரி-56 துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்ட சிப்பாயின் சடலத்தைக் கண்டுபிடித்தனர்.

# தாய்லாந்தின் உயர் படைத்தளபதி கொழும்புக்கு வருகை தந்துள்ளார்!

(கொழும்பு)

தாய்லாந்து முடிக்குரிய அரசின் உயர் இராணுவத் தளபதி சுரயுட் குளநோன்ட் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை வந்துள்ளார்.

இவர் தியத்தலாவ இராணுவ முகாமில் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டபின், இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல அளித்த இராப்போசன விருந்தொன்றிலும் பங்குபற்றினார்.

இவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகாவையும் சந்தித்துப்பேச ஏற்பாடாகியுள்ளது.

# வங்கிப் பெட்டகங்களில் பிள்ளைகளின் சேமிப்பும்!

## அனுருத்த ரத்வத்தை கூறுகிறார்

(கொழும்பு)

வங்கிப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 4 கோடி 33 இலட்சம் ரூபா பெறுமதியான வங்கி சேமிப்புப் பத்திரங்களில் ஒருபகுதி, தனக்கோ தனது மனைவிக்கோ சொந்தமானதல்ல.

அது லோஹான், மஹேன் ஆகிய தமது பிள்ளைகளுக்கு உரித்துடையது என்று முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக லோஹான் ரத்வத்த, மஹேன் ரத்வத்த ஆகியோரிடம் லஞ்ச விசாரணை ஆணைக்குழு விசாரணை செய்தபோது -

தாங்கள் செய்த வியாபாரத்தில் ஈட்டிய வருமானத்திலிருந்து இந்த சேமிப்புப் பத்திரங்கள் வாங்கப்பட்டன என்று தெரிவித்தனர்.

# ஐக்கிய அமெரிக்காவினது அரசியலமைப்பின் சிறப்பியல்புகளும் அதன் சமூகப் பின்புலமும்

**சுயநிர்ணயம் - ஒரு பார்வை**
**பகுதி - 15**

**வேலும்மயிலும் சேந்தன்**

சென்ற வாரத் தொடரிலே அமெரிக்கத் தேசிய அரசு பற்றிய சிந்தனை எவ்வாறு தோற்றம் பெறத் தொடங்கியது என்பதனை இறுதியிலே பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக, இன்று அமெரிக்க அரசியல் திட்டத்தினை- தமது நலன்களைப் பேணும் முகமாக உயர் குழாத்தினர் எவ்வாறு உருவாக்கினார்கள் என்பதனை இவ் வாரம் முதற்கொண்டு பார்ப்போம்.


அமெரிக்காவின் ஆரம்பகுடியேற்றத்தின்போது பெண்கள்

இவர்களே வர்த்தகத்தின் மூலமும் விவசாயத்தின் மூலமும் அதிக செல்வத்தினைத் திரட்டினர். மேலும்- தமது நலநோக்கின் அடிப்படையில் அமெரிக்காவின் அரசியலையும் தீர்மானித்தனர்.

ஆனால், வர்த்தகத்தினைப் பொறுத்தவரையில் பிரித்தானியாவுடன் மட்டுமே குடியேற்றக்காரர்கள் வர்த்தகத்தில் ஈடுபட முடிந்தது. வேறு நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபடுவதைப் பிரித்தானியா தனது நலன் கருதி அனுமதிக்கவில்லை.

அதேவேளை - இக்குடியேற்றங்களில் செல்வச் செழிப்புக் காரணமாக உருவாகிய உயர் குழாத்தினர், மற்றைய மக்களைவிடத் தம்மை விசேடமாக உயர்ந்தவர்கள் **(Elites)** எனக் கருதியே, மேலும் செல்வம் சேர்க்கும் வழிகளை ஆராயத் தொடங்கினர்.

இந்த வகையில், பிரித்தானியாவினது கட்டுப்பாடுகளும், அவர்கள் விதித்த வரிச்சுமைகளும் இந்த உயர் குழாத்தினரது முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தன. எனவே- இப்பதின் மூன்று குடியேற்றங்களிலும் உருவாகிய உயர்குழாத்தினர், தமக்குள்ள செல்வம் சேகரிப்பது தொடர்பான தடைகளை எவ்வாறு கையாள்வது என்ற தொடர்பில் கூடி ஆராயத் தலைப்பட்டனர்.

பிரித்தானியாவைப் பொறுத்தவரையில் - அது தனது நலன்களைக் கருத்தில் எடுத்துக் கொண்டு- அமெரிக்கக் குடியேற்றங்களில், தனக்கு வேண்டிய பொருட்களை மட்டுமே - அமெரிக்கர்கள் உற்பத்தி செய்து தமக்கு விநியோகிக்க வேண்டும் என்ற நிபந்தனையைச் சட்டமாக்கியது. அது மட்டுமல்லாமல் - ஒவ்வொரு குடியேற்ற நாடுகளின் சட்ட சபைகளில் ஆளுநர்களைக் கொண்டு - அமெரிக்கர்களின் வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியும் கண்காணித்தும் வந்தது.

பிரித்தானியாவினது இந்த நடவடிக்கைகள் - அமெரிக்காவின் பதின்மூன்று குடியேற்ற நாட்டுச் சட்டசபைகளிலும் எதிரொலித்தன. ஒவ்வொரு சட்டசபைகளிலும் அந்தந்தக் குடியேற்றங்களில் உருவாகிய உயர்குழாத்தினர், தமது நலன் பேணும் நோக்கில் சட்டசபை உறுப்பினர்களாகி - தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர்.


இந்தவகையில் - ஒவ்வொரு சட்ட சபையிலும் உயர்குழாத்தினர் தமது வர்த்தக நலன் கருதி - பிரித்தானியாவால் நியமிக்கப்பட்ட ஆளுநருடன் முரண்பட்டுக் கொண்டனர். அதேவேளை - சட்டசபையின் ஆளுநர் முழுக்க முழுக்கப் பிரித்தானியாவினது நலனையே முன்னிறுத்திவந்தார்.

இம்முரண்பாடே - அமெரிக்காவின் சுதந்திரப் போருக்கு வித்திட்டது என்பது மிகையான கூற்றல்ல.

### அமெரிக்கச் சுதந்திரப் போருக்கான அடிப்படை அம்சங்கள்

அமெரிக்காவின் ஒவ்வொரு குடியேற்றத்திலும் ஆட்சி முறைமை இரண்டு பிரிவினரின் முரண்பாட்டுக் களமாக இருந்தது. அதாவது - உயர்வர்க்கத்தினர் தமது நலன் பேணும் வழிவகைகள் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்க, சட்ட சபையின் ஆளுநரோ - பிரித்தானியாவின் நலன் பேணும் வழிவகைகள் பற்றிச் சிந்தித்து நடவடிக்கைகளை எடுத்தார். இதனால், குடியேற்றங்களில் வாழ்ந்த சாதாரண மக்களின் நலன் நோக்கு புறக்கணிக்கப்பட்டு, மறக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. இதனால் மக்களிடையே கலகங்கள் உருவாகின.

இக்கலகங்களைக் கட்டுப்படுத்த பிரித்தானியா மேலதிக படைகளை வேலைக்கமர்த்த வேண்டியிருந்தது. இதனால் உருவான செலவினத்தினை ஈடுசெய்ய, பிரித்தானியா 1765 முதல் முத்திரைச் சட்டம் **(Stamp Act)** என்ற சட்டத்தின் மூலம் வரி வசூலிக்கத் தொடங்கியது. இந்த மறைமுக வரிவிதிப்பானது மக்களிடையே பிரித்தானியாவிலிருந்து, அதன் அதிகாரத்திலிருந்து பிரிந்து செல்ல வேண்டுமென்ற சுதந்திர வேட்கையைத் தூண்டியது.


கலகமடக்கும் பிரித்தானியாவின் பீரங்கிப் படைவீரன்

அதனைவிட குடியேற்ற நாடுகளின் பாதுகாப்புக்கான செலவினத் தொகையை ஈடுசெய்வதற்காக - தேயிலை, காகிதம், கண்ணாடிப் பொருட்கள் மீது அதிகளவு வரி விதிப்புத் தொடங்கப்பட்டது.

இதனைக் கண்டித்து 13 குடியேற்ற நாடுகளும் இப்பொருட்களைப் பிரித்தானியாவிடமிருந்து கொள்வனவு செய்வதில்லை எனத் தீர்மானித்தன. இதனால் நட்டமடைந்த பிரித்தானியா 1770ஆம் ஆண்டு தேயிலை தவிர்ந்த ஏனைய பொருட்கள் மீதான வரியை இரத்துச் செய்தது.

ஆனால், தேயிலை மீதான வரியை மசாசூட்ஸ் குடியேற்ற அரசு மட்டும் ஏற்கமறுத்தது. இதனால் மசாசூட்ஸ் சட்டசபை, அதன் ஆளுநரால் கலைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலகத்தினை இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அடக்கினர். இவ்வடக்கு முறையில் மூன்று கலகக்காரர் கொல்லப்பட்டனர். இதனையே "பொஸ்ரன் படுகொலை" **(Boston Massacure)** என இன்றும் வர்ணிக்கின்றனர்.

இக்கலகத்தினைத் தொடர்ந்து- பிரித்தானியா, இந்தியாவில் இருந்து தேயிலையை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்ய ஒழுங்குகளை மேற்கொண்டது. இதனால், அமெரிக்காவில் தேயிலையின் விலை பாரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. இவ்விலை வீழ்ச்சியை - அமெரிக்கர்கள் தேயிலையின் விலையைக் குறைத்து, தம்மைத் தேயிலை மீதான வரியை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான சூழ்ச்சி எனத் தவறுதலாகப் புரிந்து கொண்டனர்.

இதனால் - மசாசூட்ஸ் குடியேற்றத்திலிருந்த பொஸ்ரன் துறைமுகத்தில் தேயிலையை ஏற்றிக் கொண்டு வந்த கிழக்கிந்தியக் கம்பனிக் கப்பல் ஒன்றில் - அமெரிக்கர்கள், செவ்விந்தியர்கள் போல் வேடம் தரித்து ஏறி அக்கப்பலிலிருந்த 340 தேயிலைப் பெட்டிகளை கடலில் வீசியெறிந்தனர். இந்நிகழ்ச்சியானது "பொஸ்ரன் தேநீர் விருந்து" என இன்றும் வரலாற்று ஆசிரியர்களால் அழைக்கப்படுகின்றது.

இதனையடுத்து பொஸ்ரன் துறைமுகத்தினை தன்னகத்தே கொண்ட மசாசூட்ஸ் மாநிலத்தின் குடியேற்றச் சாசனம் பிரித்தானியாவால் இரத்துச் செய்யப்பட்டது.

இக்குடியேற்றச் சாசன இரத்தானது - பிரித்தானியா தம்மையும், தமது குடியேற்ற சாசனத்தினையும் இரத்துச் செய்துவிடலாம் என அச்சத்தை ஏனைய குடியேற்றங்களுக்கும் ஏற்படுத்தியது. இதனால் 1774ஆம் ஆண்டு பிடடெல்பியா என்னும் இடத்தில் 13 குடியேற்ற நாடுகளினதும் பிரதிநிதிகள் கூடிப் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர்.

❊ தம்மீது வரி விதிக்க பிரித்தானியாவிற்கு உரிமையில்லை.

❊ மசாசூட்ஸ் குடியேற்றத்தின் உரிமை மறுக்கப்பட்டதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

❊ பிரித்தானியாவுடன் வர்த்தகம் செய்வதனை நிறுத்த வேண்டும்.

❊ பொதுப் பாதுகாப்புக்குழு, எல்லா குடியேற்ற நாடுகளையும் இணைத்து உருவாக்கப்பட வேண்டும்.

❊ குடியேற்ற நாடுகளுக்கு என்று ஒரு இராணுவத்தினை உருவாக்கி அப்போது பிரபல்யமான இராணுவத் தளபதியாகவிருந்த ஜோர்ஜ் வொஷிங்ரனைத் தலைவராக நியமிக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.


பிலடெல்பியாவில் கூட்டப்பட்ட இம்மாநாடே அமெரிக்காவின் சமஷ்டியின் தோற்றுவாய் என்றால் அது மிகையல்ல.

### ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்பு அந்நாட்டின் நிர்வாகத்திற்கும் இறைமைக்கும் மையமான கருவியாக அமைகின்றது. அரசியல் திட்டமே அமெரிக்காவின் தாய்ச்சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தவகையில் அமெரிக்காவில் அரசியல் திட்டமானது அதன் சமூகப் பின்புலத்தினைக் கருத்தில் எடுத்துக் கொண்டதன் மூலம் தனியாள் சுதந்திரம், பொருளாதார வளர்ச்சியில் தனியார்துறையின் மேலாதிக்கம், சமூக அபிவிருத்தி என்பதை நோக்காகக் கொண்ட சமூகமே அமெரிக்காவின் அரசியல் திட்டத்தினை உருவாக்கியது எனலாம்.

அதாவது- ஆரம்பகாலக் குடியேற்றங்கள் மூலம் உருவான பெரும் விவசாயிகள், வணிகர்கள் அமெரிக்க அரசியல் திட்டத்தினை உருவாக்கியவர்களாக இருந்தனர்.


ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்க அரசியல் திட்டமானது, ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் உருவான குடியேற்றங்கள் பதின்மூன்றும்- தங்களின் ஆள்புல ஒருமைப்பாட்டை உறுதிசெய்வதற்கும், தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் ஏற்ற வகையில்- 1787 மே மாதம் உருவாக்கப்பட்டது. இந்த அரசியல் திட்டம் இன்று வரை 26 திருத்தங்களை மட்டுமே உள்வாங்கியவாறு நிலை பெற்றிருக்கின்றது.

அமெரிக்காவின் அரசியல் திட்டம் முதலாளித்துவ சமூகத்தினரால் உருவாக்கப்பட்டதால் - அவர்களின் நலன்பேணும் அரசியல் திட்டமாகவே வரையப்பட்டது. இந்த வகையில் கட்டற்ற வர்த்தகம், தனிமனித உரிமைகள் என்பன அமெரிக்க அரசியலமைப்பில் முக்கியமான விடயங்களாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான பின்னணியில் அமெரிக்க அரசியல் திட்டத்தின் சிறப்பம்சங்கள் பற்றிப் பார்ப்போம்.

அரசியல் திட்டத்தை உருவாக்கிய அரசியல் உயர்குழாத்தினர்.


### மக்கள் இறைமைக்கு முக்கியத்துவமளிக்கும் அரசியல் திட்டம்

அமெரிக்காவில் -ஒவ்வொரு மாநிலமும், வெவ்வேறான வரலாற்றினையும், ஆள்புலத்தையும் கொண்டமைந்ததனால் ஒவ்வொரு மாநிலத்திலும் மக்கள் தமது உரிமையை வலியுறுத்துவதற்காக இறைமையினை- 'ஆட்சி பீடத்தின் இறைமை'யாக மேற்கொள்ளாது, 'மக்களின் இறைமை'யாக உருவாக்கினர். இந்தவகையில், மக்கள் விருப்பப்படியே ஆட்சி செய்யப்பட வேண்டும் என அரசியல் திட்டம் வலியுறுத்துகின்றது.

அமெரிக்க மக்கள் எதேச்சதிகாரமான கொடுங்கோலாட்சிக்குப் பயந்தே இவ்வாறான தீர்மானத்தினை மேற்கொண்டிருந்தனர். இவ்வாறு- அமெரிக்க மக்கள் - 'மக்கள் மீது இறைமை' கொண்டாடுவதற்கு இரண்டு முக்கிய காரணிகள் இருக்கின்றன.

அவற்றில் ஒன்று-அமெரிக்க குடியேற்றங்கள் மீது பிரித்தானியா வரி ரீதியாகவும், தனது ஆளுநர் மூலமாகவும் மேற்கொண்ட வலிந்த ஆட்சியின் **(Bad Governance)** பாதிப்பு.

மற்றையது- அரசியல் திட்டத்தின் திட்டவரைபுகளை பொருளாதார ரீதியாக உயர்ந்த உயர் குழாத்தினரே மேற்கொண்டதால், அவர்கள் தங்கள் நலன்கள் பாதிக்கப்பட்டிருக்காத வகையிலேயே அரசியல் திட்டத்தினை வரைந்தமை.

இதுவே- பிற்காலங்களில் ஜனாதிபதி ஆபிரகாம் இலிங்கன் 'மக்களால், மக்களுக்காக நடாத்தப்படும் ஆட்சி' எனக் கூறியதற்கும் ஒரு அடிப்படையாக அமைந்தது.

அமெரிக்க அரசியல் திட்டத்தினால் - மக்களுக்கு வழங்கப்பட்ட இறைமையே -இன்றைய மனித உரிமைகளுக்கான தோற்றுவாய் என்றால் மிகையல்ல.

அதேவேளை, தனிமனித உரிமைகள் பேணப்படுவது தொடர்பான விழிப்புணர்வு- இன்று மேற்கு நாடுகளிலும் பரவலாக ஏனைய நாடுகளிலும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற இவ்வேளையில்- அமெரிக்கா தனது நலனிற்காக தற்பொழுது ஏனைய நாடுகள் மீது மேற்கொள்ளும் மறைமுக அழுத்தங்கள் மற்றும் தீர்மானங்கள்- மனித உரிமைகள் பற்றி அமெரிக்கா பேசும் விடயங்களை வேடிக்கையானதாக்கி வருவதை வாசகர்கள் நோக்கலாம்.

### வரையறைக்குள்ளும் வரம்புகளுக்குள்ளும் உட்பட்ட அரசாங்கம்

அமெரிக்க மக்கள் தாம் அனுபவித்த துன்பங்களின் பிரதிபலிப்பாக-தமது ஆட்சி எதிர்காலத்தில் குடியாட்சி என்ற பெயரில் ஒரு கொடுங் கோலாட்சியாக மாறலாம் எனவும் அச்சமடைந்திருந்தனர்.

இதனால்-அம்மக்கள் அமெரிக்க அரசியல் திட்டத்தின் வழியாக முழு அதிகாரத்தினையும் அரசாங்கத்துக்கு அளிக்க முன்வராதிருந்தனர். மாறாக- ஒரு வரையறுக்கப்பட்ட அதிகாரத்தினையே அரசாங்கத்திற்கு அவர்கள் கொடுத்திருந்தனர்.

இந்த வகையில்- அமெரிக்க அரசாங்கமானது, தன் மக்களை நிர்வகிப்பதுடன்-தன்னைத்தானே அடககியாளும் திறமையினையும் பெற்றிருக்கின்றது.

இந்த அம்சமே கட்டற்ற வர்த்தகத்தினையும் பொருளாதாரத்தினையும்-அமெரிக்கா தனது பொருளாதார கொள்கைகளாக வரித்துக் கொள்ளக் காரணமாக அமைந்தது.

நடைமுறையில் இதே கட்டற்ற வர்த்தக, பொருளாதாரச் செயற்பாடுகள் இன்று உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படுவதற்கு இந்த வரையறுக்கப்பட்ட, வரம்புக்குட்பட்ட அரசாங்க முறைமையே தோற்றுவாயாகவும் இருந்தது.

*(பிரதி செவ்வாய் தொடரும்)*

# 2002 /2003 (A) கல்வியாண்டு பல்கலை அனுமதி

# தமிழ் மாணவர் மீண்டும் புறக்கணிக்கப்படுகின்றனர்

காலம் காலமாக ஆட்சிக்கு வரும் சிங்கள அரசியல்வாதிகள் - தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்ததே எமது மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்டது என்பது வெளிச்சமாகும்.

உயிரையும் இழந்தோம், எமது உடமையும் இழந்தோம், ஆனால்- தமிழர்களின் கல்வியைப் பறிக்க அவர்களால் முடியவில்லை. எனவே, அதற்காகவே தயாரிக்கப்பட்ட தரப்படுத்தல் முறையைக் கொண்டுவந்து தமிழ் மாணவர்களின் கல்வியிலும் தமது இனவாத இறுக்கத்தைக் காண்பித்தனர். அதன் காரணமாக தமிழர் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து இன்று ஓர் தீர்க்கமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவானது பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது அனுமதி முறைகளை மாற்றி மாற்றி தமக்குச் சாதகமான அனுமதிக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது. எனினும், தற்போதுள்ள அதன் அனுமதிக் கொள்கையின்படி,

(1) தீவளாவிய திறமை **(Island merit )** அடிப்படையில் = **40%**
(2) மாவட்டத் திறமை **(District quota)** அடிப்படையில் = **55%**
(3) பின்தங்கிய மாவட்ட அடிப்படையில்
**(Educationally disadvantaged district)** அடிப்படையில் = **5%**

என்றே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

இங்கு மாவட்டத் திறமை என்பது மாவட்டத்தில் உள்ள மக்களின் சனத்தொகையிலேயே தங்கியுள்ளது. இவற்றிற்கு மானியங்கள் ஆணைக்குழு 1993/1994 கல்வியாண்டை ஒரு ம ஆண்டாகக் கருதியே அனுமதியினை மேற்கொள்கின்றது.

1991 ஆம் ஆண்டு தொகை மதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம் குடிசன மதிப்பீட்டை நடத்தாததால், 1981ஆம் ஆண்டு புள்ளி விபரத்தின்படி மாவட்டத்துக்குரிய னுமதி எண்ணிக்கையை பின்வருமாறு வரையறுத்தது.

உதாரணமாக : **மருத்துவத்துறையை** எடுத்துக்கொண்டால்,

1981 ஆம் ஆண்டு மொத்த சனத்தொகை = 14,846,750
மொத்த அனுமதி = 839
**Island merit** 40% = 324
பின்தங்கிய மாவட்டம் 5% = 42
மாவட்ட கோட்டா = 839 - (324+42)
= 473
சனத்தொகை விகிதம் = 14,846,750 / 473
= 31, 388

ஆகவே ஒவ்வொரு 31, 388 சனத் தொகைக்கும் ஒவ்வொரு மாணவர் தெரிவாவர். ஆகவே,

| மாவட்டம் | சனத்தொகை 1981 | மேற்படி எதிர்பார்க்கப்படும் இடங்கள் | ஒதுக்கப்பட்டது 1993/1994 | | |
|---|---|---|---|---|---|
| | | | District quota | Back ward | Total |
| யாழ்ப்பாணம் | 7 38 788 | 738 788 / 31 388 ≃ 24 | 24 | - | 24 |
| கிளிநொச்சி | 91 764 | 91 764 / 31 388 ≃ 3 | 04 | பின்தங்கியது (உட்பட) | 04 |
| வவுனியா | 95 488 | 95 488 / 31 388 ≃ 3 | 04 | பின்தங்கியது (உட்பட) | 04 |
| அம்பாந்தோட்டை | 4 24 344 | 424 344 / 31 388 ≃ 14 | 24 | பின்தங்கியது (உட்பட) | 24 |
| அனுராதபுரம் | 5 87 929 | 587 929 / 31 388 ≃ 27 | 27 | பின்தங்கியது (உட்பட) | 27 |

மேற்குறிப்பிட்ட வேறுபாடுகளை உடைய 1993 - 1994 கல்வியாண்டை நியம ஆண்டாகக் கொண்டே, பல்கலை அனுமதி விதிமுறையில் - 1993 -1994 ஆம் ஆண்டு கல்வியாண்டில் ஒதுக்கப்பட்ட மாணவர் தொகையைவிட குறையாத வகையில், மாணவர்கள் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படுவர் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பார்க்கும்போது, 1993 - 1994 கல்வியாண்டில் மாவட்ட கோட்டாவில் மாரணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆகவே, மானியங்கள் ஆணைக்குழு ஆகக் றைந்தது 24 மாணவர்களையே கோட்டா அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும்.

மேலும், 1993 - 1994 கல்வியாண்டில் கல்வியால் பின்தங்கிய மாவட்டத்தில் யாழ்.மாவட்டம் உள்ளடக்கப்படவில்லை. ஆனால், தற்போது **UGC** வெளியிட்ட 13 மாவட்டங்களில் யாழ்.மாவட்டமும் இடம்பெற்றுள்ளது.

எனவே, பின்தங்கிய மாவட்டத்திற்குரிய 45 அனுமதியில் ஆகக்குறைந்தது 2 அனுமதி கிடைக்க வேண்டும். எனவே, ஆகமொத்தம் யாழ்.மாவட்டத்திற்கான அனுமதி ஆகக்குறைந்தது பின்வருமாறு அமைந்து இருக்க வேண்டும்.

**மருத்துவத்துறை**

| | தீவளாவிய திறமை | மாவட்ட கோட்டா | பின்தங்கிய மாவட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| எதிர்பார்ப்பு | 10 | 24 | 2 | 36 |
| கிடைத்த அனுமதி | 10 | 21 | - | 31 |

முன்னைய ஆண்டுகளின் அனுமதி விபரம்:

| கல்வி ஆண்டு | Is.Merit | District |
|---|---|---|
| 1999/2000 | 21 | 32 |
| 2000/2001 | 15 | 28 |
| 2001/2002 | 06 | 26 |
| 2002/2003 | 16 | 28 |
| 2002/2003 (A) | 10 | 21 |

இதேபோன்று குளறுபடிகள் ஏனைய துறைகளிலும் இடம்பெற்றுள்ளது. உதாரணமாக **பொறியியல் துறையிலும்,**

| கல்வியாண்டு | Is.Merit | District |
|---|---|---|
| 1999/2000 | 98 | 34 |
| 2000/2001 | 58 | 33 |
| 2002/2003 | 29 | 28 |
| 2002/2003 (A) | 16 | 18 |

மேற்படி சடுதியாக அல்லாமல், கடந்த காலத்தில் திட்டமிட்டு பொதுவான குறைப்பு இடம்பெற்றுள்ளது. ஆனால், இம்முறை சடுதியான குறைப்பு இடம்பெற்றுள்ளது. இங்கு 1993 - 1994 கல்வியாண்டு அதாவது, நியம ஆண்டில் 18 மாணவர்கள் யாழ்.மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டபோது, உருகுணு பல்கலைக்கழக பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்படவில்லை. அதன்பின், சுமார் 200 வரையான மாணவர்கள் மேலதிகமாக உள்வாங்கப்பட்டபோதும் யாழ்.மாணவர்களுக்கான கோட்டா எதுவும் மேலதிகமாக ஒதுக்கப்படவில்லை. அதனைவிட கல்வியில் பின்தங்கிய மாவட்டத்திற்குரிய அனுமதியும் வழங்கப்படவில்லை.

கலைப்பீட அனுமதியை நோக்குவோமாயின் 1993 - 1994 கல்வியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 122 ஆகும். கலைப்பீட மாணவர் தெரிவு 100% தீவளாவிய திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறது. எனினும், குறித்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் கோட்டா இடங்களைவிட குறைப்பு செய்ய முடியாது. இது இவ்வாறிருக்க, 93/94 கல்வியாண்டில் கலைத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகை 2589 ஆகும். ஆனால் தற்போதுள்ள அனுமதி எண்ணிக்கை 4000 ஆகும். சுமார் 1500 மாணவர்கள் தீவளாவிய ரீதியில் அதிகரிக்கப்பட்டபோதும், யாழ்.மாவட்டத்திற்கென எதுவித மேலதிக அனுமதியும் இல்லாமல்

## யாழ்.பல்கலைக்கழகம் அவசரப்படுவதால் வாய்ப்புள்ள மாணவரும் பாதிப்பு!

120 மாணவர்களே தெரிவு செய்யப்பட்டனர். இதே போன்ற பாதிப்புக்கள் வர்த்தகத் துறையிலும் இடம்பெற்றுள்ளன.

1981ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் குடிசன மதிப்பீடு இடம்பெறவில்லை. 2001 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உத்தேசமாக எடுக்கப்பட்டதாக கூறப்படும் மதிப்பீட்டைக் கொண்டு, யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை தீர்மானிப்பது என்பது தமிழ் மாணவர்களின் உயர்கல்வியில் ஆப்பு வைக்கும் பாரிய துரோகத்தனமான செயற்பாடு ஆகும்.

எனவே, இது தொடர்பில் யாழ்.மாணவர்கள் வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர் அமைப்பு ஒன்றை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாநாட்டு மண்டபத்தில் கூடி அமைத்து இது தொடர்பான சட்ட ரீதியான, அரசியல் ரீதியான அழுத்தங்களைக் கொடுக்க முன்வந்துள்ளனர்.

ஆரம்ப காலங்களில் தமிழ் மக்களும், மாணவர்களும் சாத்வீக ரீதியில் நடாத்திய போராட்டங்கள் ஒடுக்கப்பட்டதாலேயே இன்று அது பெரும் விடுதலைப் போராட்டமாக உருவெடுத்தது. தற்போது நிலவிவரும் சமாதான வேளையிலும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தமது கோரிக்கைகளுக்கு சாத்வீகமான ரீதியில் தீர்வு பெற்றுத்தருமாறு எமது மாணவர் ஒன்றியத்தைக் கோரியிருந்தனர்.

எனினும், யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் 2002 - 2003**A** கல்வியாண்டுக்குரிய விரிவுரைகளை முன்னைய ஆண்டுடன் இணைத்து விரைவாக ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளனர். எனவே, பாதிக்கப்பட்ட மாணவர்கள் இதனால் மிகவும் உளவியல்ரீதியில் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும், ஏனைய பல்கலைக்கழகங்கள் யாவும் அவசரப்பட்டு விரிவுரைகளை ஆரம்பிக்காமல் இருக்க, யாழ்.பல்கலைக்கழகம் மட்டும் முந்திக்கொண்டு ஆரம்பிப்பதன் காரணம் எமக்குப் புரியவில்லை. மேலும், விரிவுரைகள் விரைவில் ஆரம்பிப்பது போன்ற போலித் தோற்றத்தை ஆட்சியாளர்களிற்கும் மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் காட்டி தாங்கள் நல்லபிள்ளையாகக் காட்டிக்கொள்ளும் நோக்கத்திற்காக எமது எதிர்கால மாணவர் சமுதாயத்தின் பல்கலைக்கழக அனுமதிக் கனவை போலியாக்க முயற்சிப்பதை பொறுப்புள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மேலும்- மாணவர்களை அனுமதிப்பதில் காட்டிவரும் அவசரம் அவர்கள் கல்வியியல், ஆசிரியர் பற்றாக்குறை, வசதி குறைவு ஆகியவற்றில் உரியதீர்வை பெறுவதில் காட்டுவதில்லை.எனவே, இச்செயன்முறை ஆட்சியாளர்களிற்கு நல்ல ஒரு தோற்றத்தை காட்டுவதற்காகவோ அன்றி வேறுசில காரணங்களிற்காகவோதான் வலிந்து கொண்ட மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து விசேடமாகப் பெறப்பட்ட தொலைநகல் **(Fax)** மூலம் மாணவர் விபரங்களை மட்டும் வைத்துக் கொண்டு விசேட உள்வாங்கல் **(Special Intake),** வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி **(Waiting List)**, அனுமதி நிராகரிக்கப்பட்ட மாணவர்கள் **(Pending List)** ஆகியவற்றின் மூலம் தெரிவு செய்யப்படும் மாணவர்களையும் புறக்கணித்துக்கொண்டு, பல்கலைக்கழகம் விரைவாக கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது எமக்கு மிகுந்த சந்தேகத்தையும் கவலையையும் அளிக்கின்றது.

எனவே, 2002 - 2003**A** கல்வியாண்டுக்குரிய விரிவுரைகளை ஒத்திப்போடுமாறு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரைக் கேட்டுக்கொள்கிறோம். (2002 - 2003 கல்வியாண்டு மாணவருக்கு உரிய விரிவுரைகளை தொடங்குவதில் தடை ஏதும் இல்லை) அத்துடன் 2002 - 2003**A** கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களும் தமது உடன் பிறப்புக்களின் கல்விக்கனவை நனவாக்குவதில் உரிய ஒத்துழைப்பு வழங்குவர் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நம்புகிறது.

அத்துடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரும் இவ்விடயத்தில் எமது மாணவர்களிற்கு உரிய ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பதிலும் நாம் நம்பிக்கையாகவுள்ளோம்.

இது பற்றி அனைத்துப் பீடாதிபதிகளுக்கும், தமிழீழக் கல்விக் கழகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டு, அவர்தம் ஆதரவு கோரப்பட்டுள்ளது.

*தரவுகள்*
1. தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

**பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுமுகமான நிலையில் நடைபெற்ற மட்டு. பாதுகாப்பு உபகுழுக் கூட்டம்

## மட்டு. சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாதுகாப்பு உப குழுக்கூட்டம் வவுணதீவு பிரதேச சபைக் கட்டடத்தில் நேற்று நடைபெற்றது. விடுதலைப்புலிகள் சார்பில் மட்டு. அம்பாறைச் சிறப்புத் தளபதி ரமேஸ், அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிதித் துறைப் பொறுப்பாளர் சுபி மற்றும் தளபதி பிரபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராணுவத்தரப்பில்- கிழக்குப் பிராந்தியத் தளபதி பிரிகேடியர் பாலசூரியவும் வேறு சில அதிகாரிகளும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த அன்றூ ஹொக்லன்ற் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்வுபகுழுக் கூட்டத்தில், கல்லடியில் விடுதலைப்புலிகளின் முகாம் சுற்றிவளைக்கப்பட்டு இராணுவத்தினரால் தேடுதல் நடைபெற்றதை விடுதலைப்புலிகள் இராணுவத்தினரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அதேபோல்- மட்டக்களப்பு இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்த புலேந்திரராஜா காணாமல் போனது பற்றி இராணுவத்தினரால் விடுதலைப்புலிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.


இதற்கு, விடுதலைப்புலிகள் மேற்படி சம்பவம் இராணுவத்தி[னரின்] கட்டுப்பாட்டுப் பகுதியினு[ள்] நடைபெற்றுள்ளமையினால் தமக்கு இவ்விடயத்தில் சம்பந்[த]மில்லை எனத் தெரிவித்திருந்தனர்.

பேச்சுகள் யாவும் சுமுகமான முறையில் நடைபெற்றதாக விடுதலைப் புலிகளின் சிறப்புத்தளபதி ரமேஸ் பின்னர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

(06)

## றோஸ் கார்டின் ஹோட்டலில்...







## துரித மனிதாபிமான உதவிகள்...

கிறது. மக்களின் வாழ்க்கை நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஒரு வருட காலத்தில் பல பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. நான்காவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. பல இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளன. பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஆனால், எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் எமது மக்களுக்கு எந்த வித நன்மையும் இல்லை.

சர்வதேச உதவிகளை விரைவாகப் பெற்று, வடக்கு-கிழக்கின் மீள்கட்டுமானம், புனர்வாழ்வுப் பணிகளை மிக விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே இன்றைய பேச்சுக்களில் கலந்துரையாடப்பட்ட முக்கியமான விடயமாகும்.

புனர்வாழ்வு, மீள் கட்டுமானம் என்பவற்றுக்கான சர்வதேச நிதியுதவிகளைப் பெறுவதும், வடக்கு-கிழக்கிலே ஆரம்பிக்கப்பட்டுள்ள உபகுழுவுக்கும் அதற்கான செயலகத்திற்கும் இதற்காக அமைக்கப்பட்ட நிதியத்துக்கும், சர்வதேச உதவிகளை விரைவாகப்பெற்று-அதை நடைமுறைப்படுத்துவதற்கு, இந்தப் பேச்சுக்களில் ஒரு உறுதியான முடிவை எட்ட வேண்டும் என்பது முக்கியமாக முன் வைக்கப்பட்ட யோசனையாகும்.

இந்த உதவிகளூடாக - சிதைந்த நிலையிலுள்ள மக்களின் அடிப்படைக் கட்டுமானங்களைச் சீர்செய்ய வேண்டும். போக்குவரத்துச்சாலைகள் முழுமையாகச் சிதைவடைந்த நிலையிலேயே இருக்கின்றது. குளங்கள், நீர்ப்பாசனத்திட்டங்கள் செயலிழந்த நிலையில் இருக்கின்றன. சுகாதார வைத்திய வசதிகள், பாடசாலைக் கல்வி என அனைத்து அடிப்படைத் தேவைகளுமே சிதைந்த நிலையில் இருப்பதால் - அவற்றை உடனடியாக மீளமைக்க வேண்டும்.

இவை மிக மிக அவசரமான மனிதாபிமானப் பிரச்சினைகள். இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதும், அவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்துவதும் அவசரமும் அவசியமுமான பணியாகும்.

கடந்த ஒரு வருடகாலமாக நடத்தப்பட்ட பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைக்கு கொண்டுவராவிட்டால் மக்கள் இதை அர்த்தமற்றதாகவே கருதுவார்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறியிருக்கிறோம்.

மீள் குடியேற்றத்துக்கு தடையாக இருக்கும் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை, இராணுவ ஆக்கிரமிப்பு போன்ற விடயங்கள் இன்றைய பேச்சுக்களில் இடம்பெறும்.

இந்தச் சுற்றுப் பேச்சுக்களில் இவ் இரு விடயங்களுமே முக்கியமாகப் பேசப்படவுள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே, முன்னெடுத்துச் செல்லப்படவுள்ள எதிர்கால அரசியல் பேச்சுக்களை முன்கொண்டு செல்வதற்கு அடிப்படையாக அமையும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

வரும் நாட்களில் எடுக்கப்படும் முடிவுகள், முன்னேற்றங்களின் அடிப்படையில்தான் பேச்சுக்கள் தொடர்பாக உறுதியாகக் கூறமுடியும்.

மீளக்குடியேறும் மக்களுக்கான அவசரமான மனிதாபிமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதனூடாகவே தற்போது எதிர்நோக்கப்படும் நெருக்கடி நிலையை நீக்கலாம்.

கடந்த பல வருடங்களாக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படாத அதேவேளை, மக்களின் அடிப்படைக் கட்டுமானங்களே சிதைக்கப்பட்டுள்ளன.

மக்களின் அடிப்படைத் தேவைகளை மிக அவசரமாகவும் துரிதமாகவும் நிறைவேற்றப்படவேண்டிய பொறுப்பில் நாம் இருக்கிறோம். சமாதான முன்னெடுப்புக்களில் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமானால் இந்தப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வுகா[ண] வேண்டும்.

அன்றாடப் பிரச்சினைகள் மிக அவசியமானது. இது மனிதா[பி]மான நெருக்கடியாக மாறியுள்ள நிலையில், இதற்கு முதலிடம் கொடுத்து - தனியே இணக்கப்பாடு கண்டு அறிக்கை விடுவதோடு மட்டுமன்றி - அதை நடைமுறைப் படுத்துவது தொடர்பான உறுதியான முடிவை எட்டும்படி தலைவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

பேச்சுக்களில் வாக்குறுதிகளும் இணக்கப்பாடுகளும் வருகின்றதே, தவிர எதுவுமே மக்கள் நம்பிக்கை கொள்ளக் கூடிய வகையில், மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையில் வேலைத்திடங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

இதை இப்படியே தொடர்வது அர்த்தமற்றதென்பதை நாம் அரசாங்கத்துக்கு மிகத் தெளிவாக வலியுறுத்திக் கூறியுள்ளோம். இந்தப் பேச்சுக்களின் போது கண்டிப்பாக - கட்டாயமாக, உறுதியான முடிவுகளை இந்த இரண்டு விடயங்களிலும் எட்ட முயற்சி செய்வோம்.

## மூன்று மணிநேரம்...

ஆரம்பமான நான்காவது சுற்று சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகளின் தரப்பில்-கலாநிதி அன்ரன் பாலசிங்கம், சு.ப. தமிழ்ச்செல்வன், அடேல் பாலசிங்கம், கேணல் கருணா, ஜோய் மகேஸ்வரன், உருத்திரகுமாரன், புலித்தேவன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அரசதரப்புக் குழுவில் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ஹக்கீம் மற்றும், பேனாட் குணதிலக, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, ஒஸ்ரின் பெர்ணான்டோ ஆகியோரும் முஸ்லிம் பிரதிநிதிகள் இருவரும் கலந்து கொண்டனர்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஜோன் வெஸ்பேர்க் ஆகியோரும் இப்பேச்சுக்களில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

பேச்சுக்கள் நடைபெறும் நகொன் பத்தம் றோஸ் கார்டின் ஹொட்டேலினைச் சூழவும், உள்ளேயும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் ஏற்பாடுகளை தாய்லாந்து பொலிசார் மேற்கொண்டிருந்தனர். இதற்காக மோப்ப நாய்கள் பல ப[ணி]யில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

நேற்றைய தினம் பேச்சுக்[கள்] நடைபெற்ற மண்டபத்துக்குள் ப[த்]திரிகையாளர்கள் படப்பிடிப்புக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். வெளிநாட்டுப்பத்திரிகையாளர்கள் பலர் படையெடுத்து அங்கு வந்திருந்தனர்.

## யாழ். வந்த....

திரும்பி ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்தார்.

அதுபற்றி விளக்கும் பத்திரிகையாளர் மாநாடு நேற்றிரவு கொழும்பு ஹில்ரன் ஹோட்டேலில் நடைபெற்றது. கவாக்குச்சியின் இலங்கை விஜயம் தொடர்பாக விளக்கிக் கூறிய ஜப்பான் வெளியுறவு அமைச்சின் செயலாளர் தக்ஹூசி மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்திப்பதற்கு புலிகள் தலைமைப்பீடம் அழைப்பு விடுத்திருக்கின்றது. இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் சமாதானத் தூதுவர் யசூகி அகாஷி விரைவில் இலங்கை வந்து பிரபாகரனை சந்திப்பார் என்று தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்திய நிலைப்பாடு என்னவென்பதை அறிவதில் ஜப்பான் ஆவலாக இருக்கின்றது என்று தெரிவித்த தக்ஹூசி, இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவிற்கு நீண்ட கால அனுபவம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். இன்று இந்தியாவிற்கு செல்லும் அமைச்சர், ஜஸ்வந்த் சின்ஹாவையும் சந்திக்கவுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் சமாதான முயற்சி பற்றிய ஜப்பானின் நிலைப்பாட்டையும் இந்தியாவிற்கு கவாக்குச்சி எடுத்துரைப்பார் என்றும் தெரிவித்தார். அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே சமஷ்டி ஆட்சி முறையில் ஏற்பட்டிருக்கின்ற நிலைப்பாடு குறித்து ஜப்பான் மகிழ்ச்சி தெரிவித்திருக்கின்றது என்று கூறிய அவர், அத்தகைய ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கான ஊக்கத்தையும் அதற்கான வசதி வாய்ப்புகளையும் ஜப்பான் ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் சொன்னார்.

முன்னதாக ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் எச்.ஈ.யொரிக்கோ கவாக்குச்சி சூறாவளி விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகைதந்தார்.

நேற்றுக்காலை விமானம் மூலம் பலாலிக்கு வருகை தந்த இவர், யாழ்ப்பாணத்தில் "ஹலோ ட்ரஸ்ற்" நிறுவன அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார். பின்னர், அரியாலைப் பகுதிக்குச் சென்று கண்ணிவெடி அகற்றப்பட வேண்டிய இடங்களைப் பார்வையிட்டார்.

அங்கிருந்து, தென்மராட்சிக்குச் சென்று அங்கும் கண்ணிவெடி அபாயம் உள்ள பகுதிகள் தொடர்பான விபரங்களை அறிந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து, அங்கிருந்து பலாலி சென்ற அமைச்சர் விமானம் மூலமாக உடனடியாகவே கொழும்புக்குச் சென்றடைந்தார்.

## போராட்டத்தை...

ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வலி. வடக்குப் பிரதேச செயலகத்தின் முன்பாக மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்ற போது அங்குவந்தபோதே கண்காணிப்புக்குழு பிரதிநிதி இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இதற்குப்பதிலளித்த வலி.வடக்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தமது போராட்டம் தொடர்ச்சியாகவே, சுழற்சி முறையில் இடம் பெறுமென்றும், தமது கோரிக்கைகளுக்கு சுமுகமான பதில் கிடைக்கும்வரை போராட்டம் இடைநிறுத்தப்பட மாட்டாது என்றும் கூறினார்.

## அபிவிருத்தி...

டது. மீள்குடியமர்வு குறித்தும் ஆராயவுள்ளோம். மற்ற விடயங்கள் ஆராயாமல் விடப்படும் எனக்கூற முடியாது எனவும் தெரிவித்தார்.

UNIVAC
College of Computer Information Techonology
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
விசேட கட்டண சலுகையில் கணனி கற்பதற்கு உங்களிற்காகவே ஒரு புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.
விண்ணப்ப முடிவு திகதி 10.01.2003
Director,
UNIVAC,
Vaddukoddai Road,
Sithankerny.
New Hary's Institute,
Vaddukoddai Road,
Sithankerny.

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.